வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 25.03.2023 சனிக்கிழமை இதழ் : 106 பக்கங்கள் : 16




## உருவாக்கிய நியதி சட்டங்களை ஆளுநர் இரத்து செய்யவேண்டும்!

### மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 25

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உருவாக்கிய இரண்டு நியதிச் சட்டங்களையும் மே 24ஆம் திகதிக்கு முன்பாக இரத்துச் செய்ய வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இதேசமயம், மாகாண நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் ஆளுநருக்கு கிடையாது என்று வடக்கு மாகாண ஆளுநருக்கு எழுத்துமூலம் சட்ட மா அதிபரால் அறிவிக்கப்பட்டதாக அவரின் பிரதிநிதி நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடந்த ஆண்டு ஒக்ரோபர் 27ஆம் திகதி வாழ்வாதார முகாமைத்துவ முதலாம் இலக்க நியதி சட்டம், சுற்றுலா அலுவலக நியதிச் சட்டம் என்ற இரு நியதிச் சட் டங்களை உருவாக்கி வர்த்தமானி 15

## அரசமைப்புக்கு முரணாக நடந்த ஆளுநர் பதவி விலக வேண்டும்!

### வட மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அரசமைப்புக்கு முரணான செயல்பாட்டை செய்துள்ள வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா உடனடியாக இராஜிநாமா செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சி. தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா உருவாக்கிய இரு நியதிச் சட்டங்களை இரத்து செய்து அந்த வர்த்தமானியை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இந்த நிலையில், 15

## அடுத்த வாரம் மீண்டும் தொழில்சங்க நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 25

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக அடுத்த வாரம் முதல் தொழில்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தவுள்ளதாக தொழில் வல்லுநர் களின் தொழில்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

47இற்கும் மேற்பட்ட தொழில்சங்கங்கங்களை கொண்ட இந்தக் கூட்டமைப்பு நேற்று கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கலந்துரையாடலை நடத்தியது.

இதில், வரிக்கொள்கை தொடர்பில் ஜனாதிபதியுடன் முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்த கலந்துரையாடல் இதுவரை 15

## மாகாண, உள்ளூராட்சி தேர்தல்கள் அவசியம்!



### முக்கிய நாடுகளின் தூதுவர்களிடம் மனோ கணேசன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 25

உள்ளூராட்சி, மாகாண சபை தேர்தல்கள் இரண்டும் எமக்கு சமமாக அவசியம். சர்வதேச நிதி உதவிகள் மூலமான 'வறுமை நிவாரணங்கள்' பெருந்தோட்ட பிரிவினருக்கு வழங்கப்படுவது அவசியம் என்று சர்வதேச தூதுவர்களுடன் எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய சந்திப்பில் மனோ கணேசன் எம். பி. தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஏற்பாட்டில் நடந்த இந்தக் கூட்டத்தில், அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், ஜப்பான், கனடா, பிரான்ஸ், நியூசிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், இத்தாலி நாடுகளின் தூதுவர்களிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இலங்கை அரசுக்கும், சர்வ தேச நாணய நிதியத்துக்கும் இடையில் உடன்படிக்கை 15

## அடுத்த பாராளுமன்ற அமர்வில் புதிய பயங்கரவாத தடை சட்டம்

### அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உறுதி

கொழும்பு, மார்ச் 25

பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்குப் பதிலாக அரசாங் கத்தால் புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள தேசிய பாதுகாப்பு சட்ட மூலம் அடுத்த பாராளுமன்ற அமர்வில் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று சபையின் முதல் வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி. எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

புதிய பயங்கரவாத தடுப்பு சட்டம் வர்த்தமானியாக 15

## கச்சதீவில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலைகளை அகற்றுக!

### அந்தோனியார் ஆலய தளபரிபாலகர்



யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கை - இந்தியா என்ற இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் என கச்சதீவு அந்தோனியார் ஆலய யாத்திரை தள பரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்தார்.

கச்சதீவில் பௌத்த சின்னங்கள், புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான புகைப்படங்கள் வெளியான நிலையிலேயே நேற்று அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும், கச்சதீவு என்றாலே தமிழக 15

## ஐ. எம். எவ். கடன் உதவியை எதிர்ப்போர் நாட்டின் எதிரிகள்!

### சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்)வின் இலங்கைக்கான கடன் உதவியை யாரும் எதிர்ப்பதாக இருந்தால் அவர்கள் நாட்டின் எதிரிகள் என்று சம்பிக்க ரணவக்க எம். பி. தெரிவித்தார்.

ஐ.எம்.எவ்வின் நிபந்தனை மிகவும் கடினமானது. குறிப்பாக 2026 ஆம் ஆண்டாகும் போது எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 15.3வீதம் வரை அதிகரிக்க வேண்டும். அப்படியானால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க வேண்டி ஏற்படுகிறது. அதற்காக அரசாங்கம் கட்டண அதிகரிப்புகளுக்கு செல்லவேண்டி ஏற்படும்

இலங்கை 2023 இல் வங்குரோத்து அடையும் நிலை 15

## ஐ. எம். எவ். தந்தநிதியிலிருந்து இந்தியாவின் கடன் அடைப்பு!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) இலங்கைக்கு வழங்கிய முதல் தவணையான 33.3 கோடி டொலர்க ளில் இருந்து 12.1 கோடி டொலர்கள் இந்திய கடன் தொகையை செலுத்தப் பயன்படுத்தப்பட்டது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தினம் இந்த 12.1 கோடி டொலர்களும் செலுத்தப்பட்டன என்றும் அவர் கூறினார்.

வழக்கமாக சர்வதேச நாணய நிதியம் வழங்கும் கடன்கள் 15

## அரசமைப்பு பேரவைக்கு சித்தார்த்தனை நியமிக்குக!

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

அரசமைப்பு பேரவைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பரிந்துரை செய்துள்ள சித்தார்த்தன் எம். பியின் பெயர் இதுவரை பெயரிடப்படாமல் இருக்கிறது. இது அந்த தொகுதி மக்களுக்கு செய்யும் பிழையான முன் மாதிரியாகும். அதனால் உடனடியாக அவரின் பெயரை உள்வாங்க நடவடிக்கை எடுக்க 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கோயில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றி யில் பட்டை தீட்டிக் கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந் தது.

ஓர் ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி, வாலை ஆட்டிக் கொண்டே வந்தது.

யானை ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழி விட்டது.

அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றி யிடம், 'பார்த் தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது!' என்று சொல்லிச் சிரித்தது.

அப்படி பன்றி சொன்னது யானைக்கு பின்னால் சென்று கொண்டிருந்த மற்றுமொரு யானைக்கு கேட்டுவிட்டது.

அந்த யானையைப் பார்த்து அது 'அப்படியா, நீ பயந்து விட்டாயா?' என்று கேட்டது.

அதற்குக் கோயில் யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்னது:

'நான் தவறி இடறி விட்டால் பன்றி நசுங்கி விடும். நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றி யின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங் களால் நான் ஒதுங்கிக் கொண்டேன்.'

தமிழரசு கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலை வர் இரா. சம்பந்தன் பற்றி இந்தப் பத்தி யில் பல தட வைகள் குறிப் பிட்டிருக் கின்றோம்.

அவரின் தலைமை பற்றி ஈழநாடு பல தடவை தனது தலையங்கத்திலும் விமர்சித் திருக்கின்றது. அவர் பல சந்தர்ப் பங்களில் செய்யக் கூடிய பல வற்றை தவற விட்டிருக்கிறார் என்பதை சுட்டிக்காட்டி வந்தி ருக்கின்றோம்.

ஆனாலும், சம்பந்தனிட முள்ள சில ஆளுமைகளை இந்தப் பத்தியில் அவ்வப் போது குறிப்பிடுவதற்கும் நாம் தவறிய தில்லை. அவர் அண்மைக் காலமாக மிகுந்த மனஉளைச்ச லில் இருக்கிறார் என்பதை அறியமுடிகின்றது.

அண்மையில், சசிகலா ரவிராஜ் தனது முகநூல் பதிவு ஒன்றில் குறிப்பிட்டி ருந்த சில விடயங்கள் பற்றி யும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

உள்ளூராட்சி தேர்தலை யொட்டி யாழ்ப்பாணத்தி லும் திருகோணமலையிலும் வேட் பாளர் தெரிவு தொடர் பாக ஆராய்வதற்காக, மன்னாரில் நடைபெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சம்பந்தன் ஐயா விடுத்திருந்த கோரிக்கை பற்றியும் அந்தப் பத்தியில் பார்த்திருந்தோம்.

குறிப்பாக, திருகோண மலை மாவட்ட சபைகளுக் கான வேட்பாளர் தெரிவில் தான் சேர்க்கச் சொன்ன வேட்பாளர்கள் எவரும் உள்வாங்கப்படாததால் கடும் மன உளைச்சலில் உள்ள சம்பந்தன், முக்கியமாக அது தொடர்பாக ஆராய்வதற்கே குழு அமைக்கச் சொல்லி யிருந்தார்.

எவர் ஒருவருக்கும் தன் னோடு இருக்கின்ற ஒருவரே நம்பிக்கை துரோகம் செய் கின்ற போது அதன் வலி நாம் அனை வரும் அறிந்ததுதான். அதுவும் நம்மாலேயே வளர்த்தெடுக்கப் பட்டவர் களே நமக்கு துரோகம் செய்கின்றபோது அதன் வலி அதிகமாகத்தான் இருக்கும்.

சம்பந்தன் ஐயாவுக்கும் அப்படியொரு வலி இருப் பதாகவே தெரிகின்றது.

அண்மையில், அவர் தமிழ ரசு கட்சி கூட்டமைப்பில் அங்கம் வகித்தபோது அவ ரோடு இயங்கிய கட்சி ஒன் றின் தலை வரை தனது வீட் டுக்கு அழைத்து பல்வேறு விடயங்களையும் மனம் திறந்து பேசியிருக்கி றார்.

அப்படிப் பேசிக்கொண் டிருந்தபோது, 'தமிழரசுக் கட்சியை சீர்குலைக்க சிலர் முயற்சிப்பதாகத் தெரிகின் றது' என்ற தனது சந்தேகங் களை கூறிய அவர், அது குறித்து அந்தத் தலைவரின் கருத்தைக் கேட்டிருக்கிறார்.

அப்படி அவர் கேட்ட போது, இவரும் அதனை ஏற் றுக்கொள்வதுபோல சொல்ல, தமிழரசு கட்சியிலுள்ள ஒருவ ரின் பெயரைச் சொல்லி, அவர் தான் அப்படி செய்கி றார் என்று தானே சொல்கிறீர் என்று கேட்டாராம்.

அதற்கு இந்தத் தலை வரோ, அவர் மத்திரமல்ல, பலரும் அத னைச் செய்வதாக பட்டிய லிட்டதுடன், அந் தப் பட்டியலில் சம்பந்தன் சொல்லிய நபரே முதலாமி டத்தில் இருப்ப தாகவே தான் நம்புவதாகவும் கூறியிருக்கி றார்.

உடல்ரீதியாக சம்பந்தன் தளர்ந்துபோயிருந்தாலும், தனது காலத்துக்குள் தமிழ் மக்களுக்கு ஓர் ஏற்றுக்கொள் ளக்கூடிய தீர்வு ஒன்றைப் பெற்றுவிடவேண்டும் என்பதில் அக்கறையுள்ளவரா கவே இருக்கிறார் என்று முன் னரும் குறிப்பிட்டிருந்தேன்.

அவர் தனது வயோதிபம் காரணமாகவும், உடல்ரீதி யாக தளர்ந்துபோயிருப்பதை சிலர், மேலே சொன்னது போல பன்றிக்கு பயந்து தான் யானை விலத்தி செல்கின்றது என்று நினைத்துக் கொண் டிருக்கின்றனர்.

அவர் தளர்ந்துபோயி ருந்தாலும் தான் இப்போதும் யானை தான் என்பதை நிரூபிக்க முற்படுகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.!

- ஊர்க்குருவி

# ஜனாதிபதி ரணில் தேசிய சொத்து; அவரை காப்பது மக்களின் கடமை!

## வஜிர அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, மார்ச் 25

நாடு வீழ்ச்சியடைந்த போது தனியொரு நபராக சவாலை ஏற்று அதில் வெற்றி பெற் றுள்ள ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தேசிய சொத்தா வார். அவரை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மக்க ளின் கடமையாகும். அவர் வழங்கிய வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றி கடனற்ற நாடாக இலங்கையை மாற்று வார் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் எம். பியுமான வஜிர அபேவர்த்தன தெரிவித் தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பிறந்தி தினத்தை முன்னிட்டு நேற்று ஐ. தே. க. தலைமையகத்தில் நடந்த நிகழ்விலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பிறந்த தினம் நாட்டுக்கு மிகவும் முக் கியத்துவமுடைய தினமாக மாறியுள்ளது. இதுவே ஐ.தே. கவுக்கு காணப்படும் பெருமை யாகும். அவரது பிறந்த தினத் துக்கு 48 மணித்தியாலங் களுக்கு முன்னர் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப் பியுள்ளார்.

குறிப்பிட்ட சிலருக்கு மாத் திரமே வெளிநாடு செல்ல முடி யும் என்ற நிலைமையை மாற்றி யமைத்தது ஐ.தே.கவாகும். இதன் காரணமாக நாட்டி லுள்ள எந்தவொரு பிரஜைக் கும் வெளிநாடுகளில் சென்று கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வாறான நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க போன்ற தலைவர்களை நாடு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனினும், நாட்டு மக்கள் அதனை செய்யவில்லை. அதன் காரணமாகவே தற் போது துன்பத்தை அனுப விக்கின்றனர். இவரைப் போன்ற தலைவர் எவ்வித பேதமும் இன்றி அனைத்து மக்களாலும் பாதுகாக்கப்பட் டால், நாட்டி லுள்ள இளை ஞர்கள் வெளி நாடு செல்வ தற்கு பதிலாக வெளிநாட்டவ ருக்கு இலங்கையில் வேலை வாய்ப்பை வழங்கும் சூழல் உருவாக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க தேசிய சொத்து என்ற ரீதியில் நாமனைவரும் பெரு மிதம் கொள்கின்றோம். நாடு வீழ்ச்சியடையும் போது தனித்து சவாலை ஏற்று வெற்றி பெற அவரால் முடிந்துள்ளது. 224 பாராளுமன்ற உறுப்பினர் களும் இன்றி தனி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை ஒப்படையுங்கள் என்று பல முறை நாம் கூறியமை இதன் காரணமாகவே.

அவரின் பிறந்த தினத்தில் அனைவரும் எரிபொருள், எரிவாயு , மண்ணெண்ணெய் உள்ளிட்டவற்றை எந்தவொரு தட்டுப்பாடுமின்றி பெற்று அன்றாட செயற்பாடுகளை அசௌகரியங்கள் இன்றி முன்னெடுத்துச் செல்கின்றனர். எனவே இனியாவது மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின் றோம் - என்றார்.

(ஐ)

# சாலிய பீரிஸுக்கு எதிராக போராட்டம் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்!

கொழும்பு, மார்ச் 25

ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸின் பணிமனை முன்பாக நேற்று வெள்ளிக் கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் வெளி யிட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்க ாரனான 'ஹரக் கட்டா' என்று அறியப்படும் நதுன் சிந்திக்க சார்பில் முன்னிலையானதற்கு எதிர்ப்புத்தெரிவித்து இப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இதுகுறித்து கடும் கண்ட னத்தை வெளிப்படுத்தியிருக் கும் சட்டத்தரணிகள் சங்கம், சட்டத்தரணி என்ற ரீதியில் சாலிய பீரிஸால் முன்னெ டுக்கப்படும் தொழில்சார் கடமைகளுக்கு எவ்வித இடை யூறும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன விடம் கடிதம் மூலம் வலி யுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி சாலிய பீரிஸின் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன் னெடுக்கப்பட்டமையானது, தமது சேவை பெறுநரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அவர் கொண்டிருக்கும் உரி மைக்கு இடையூறு ஏற்படுத் தும் வகையில் அமைந்துள் ளது என்றும் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்ன ணியில் அவரது தொழில்சார் உரிமையையும், அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கு மாறும் அந்தச் சங்கம் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# பாடசாலைகளில் முதலாம் தவணை திங்களன்று ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 25

2022 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்த தாக 2023ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 60 சதவீதத்துக்கு மேல் பாடசாலைக்கு மாணவர்கள் வர முடியாததால் காரணத்தால் இந்த வருடத் தில் அதிக விடுமுறை வழங்கவில்லை என்று குறிப்பிட்டார்.

பாடசாலைகளில் முதலாம் தவணை பொதுவாக ஜனவரியில் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கொரோனா காரணமாக தாமதமான கால அட்டவணையை தாங்கள் முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்தி முடித்ததாக தெரிவித்த அவர், 2022 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் வெளி யிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பெரும்பாலான பாடசாலைகள் செவ்வாய்க் கிழமை தரம் ஒன்று மாணவர் சேர்க்கைக்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

# பல்கலை களஞ்சியத்திலிருந்து ரூ. 10 இலட்சம் பொருட்கள் களவு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். பல்கலைகழக களஞ்சியத்திலிருந்து 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான மின் பொருட் கள் களவாடப்பட்டமை தொடர்பாக கோப் பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டிருக்கின்றனர்.

பல்கலைகழக பராமரிப்பு கிளையின் களஞ் சியசாலையிலிருந்து மின் இணைப்பு சாதனங்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் நீண்டகாலமாக களவாடப்பட்டுள்ளது. குறுகிய காலத்திற்குள் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான மின் இணைப்பு வயர்கள், கட்டுக்கட்டாக காணாமல் போயுள்ளன.

இதனை அறிந்துகொண்ட நிர்வாகம் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கியுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
25.03.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 10

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஐ. எம். எவ்வால் இனப்பிரச்னையில் தலையிட முடியுமா?

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உறுதியளிப்பட்ட நிதியில் ஒரு பகுதியை விடுவித்திருக்கின்றது. இதனைத் தொடர்ந்து பொருளாதார இறுக்கத்தில் சில தளர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. நாணய நிதியத்தின் நிபந்தனைகள் முறையாக நிவர்த்தி செய்யப்படும் போது பொருளாதார நிலைமைகள் வேகமாக மாற்றமடையலாம். இறக்குமதி கட்டுப்பாடுகளும் நீக்கப்படலாம். அவைகள் படிப்படியாக நீக்கப்பட்டேயாக வேண்டும். ஏனெனில், நாணய நிதியத்தை பொறுத்த வரையில், இலங்கையின் வருமான மூலங்களை அதிகரிக்க வேண்டும். இறக்குமதி கட்டுப்பாடுகளை பேணிக்கொண்டு வருமான மூலங்களை அதிகரிக்க முடியாது.

தமிழ் சூழலில் ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. எல்லாவற்றையும் உணர்ச்சிவசப்பட்டு நோக்குவது போன்றே சர்வதேச நாணய நிதிய விடயங்களிலும் தமிழ் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகள் என்போரும் உணர்ச்சிவசப்படுகின்றனர். கனடாவின் பாராளுமன்ற உறுப்பினரான ஹரிசங்கரி அரசியல் தீர்வு தொடர்பில் நாணய நிதியம் சில நிபந்தனைகளை விதித்திருக்கலாம் – ஆனால், விதிக்கவில்லையென்று குறிப்பிட்டிருக்கின்றார். முதலில் நாணய நிதியத்தின் எல்லையை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான இலக்கு நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். ஒரு நாடு பொருளாதார ரீதியில் திவாலாகும் போது, அது ஏனைய நாடுகளையும் பாதிக்கும் – இதனை தடுப்பதற்கு குறித்த நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தூக்கிவிட வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் நாணய நிதியம் ஒரு நாட்டின் பொருளாதார விடயங்களில் தலையீடு செய்யும். குறித்த நாடு நாணய நிதியத்தின் உதவியை கோரும்போது, நாணய நிதியம் சில நிபந்தனைகளோடு குறித்த உதவியை வழங்குவதற்கு இணங்கும். அதேவேளை, குறித்த நாடு நாணய நிதியத்தின் நிபந்தனைகளை சரியாக நிவர்த்தி செய்கின்றதா என்பதையும் தொடர்ந்து கண்காணிக்கும்.

கடனுதவியை வழங்கும் போது, குறித்த நாட்டின் உள்ளக அரசியல் விடயங்களில் தலையீடு செய்யாது. ஆனால், நல்லாட்சி மற்றும் சட்டம் ஒழுங்கு விடயத்தில் கவனம் செலுத்தும். ஒரு நாட்டில் நல்லாட்சி கட்டமைப்பு முறையாக கடைப்பிடிக்கப்பட்டால்தான், அந்த நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமாக நிலைபெறும். இந்தப் பின்புலத்தில் நாணய நிதியத்தின் கடனுதவிகளை பெறும் நாடுகளில் சட்டம் ஒழுங்கு மற்றும் நல்லாட்சி கட்டமைப்பை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாாணய நிதியம் வலியுறுத்தும்.

நல்லாட்சி விடயத்தில் நாணய நிதியத்தின் பங்களிப்பு எவ்வாறு அமையுமென்பது தொடர்பில் அந்த அமைப்புக்கு என்று கொள்கை நிலைப்பாடு உண்டு. நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையால் 1997இல், இணக்கம் காணப்பட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. இது பின்னர் 2018இல் மீளவும் திருத்தியமைக்கப்பட்டது. ஒரு நாடடின் நல்லாட்சியில் நாணய நிதியத்தின் பங்களிப்பு எவ்வாறு அமையுமென்று, குறித்த கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதற்கப்பால் உள்நாட்டில் அரசியலை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும், சிறுபான்மை மக்களின் பிரச்னையை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்று நாணய நிதியம் பரிந்துரைகளை முன்வைக்காது – அவ்வாறு முன்வைக்கவும் முடியாது. இதனைப் புரிந்து கொண்டே, நாணய நிதியம் தொடர்பில் பேச முற்பட வேண்டும். சாமானியர்கள் உணர்ச்சிவசப்படுவதில் தவறில்லை. ஆனால், மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும், அரசியல் பிரதிநிதிகள் என்போர், விடயங்களை பேசுவதற்கு முன்னர், நாணய நிதியத்தின் கொள்கை நிலைப்பாடுகளை குறைந்தளவிலாவது படிக்க வேண்டியது அவசியமானது.

# கிராஞ்சி கடலட்டை பண்ணை வழக்கு; மக்கள் முறைப்பாட்டை விசாரிக்கவும்

## வவுனியா மேல்நீதிமன்று உத்தரவு

*கிளிநொச்சி, மார்ச் 25*

*கிராஞ்சி கடலட்டை பண்ணை அமைப்பதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் மக்களின் முறைப்பாடுகளை விசாரிக்க வேண்டும் என்று வவுனியா மேல் நீதிமன்றால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு தவணையிடப்பட்டது.*

*கிராஞ்சியில் அமைக்கப்பட்டுவரும் கடலட்டை பண்ணைக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதுடன் குறித்த விடயம் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தனர்.*

*குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் எதிர்வரும் 5 ஆம் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

*இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,*

*கிராஞ்சியில் கடலட்டை பண்ணை அமைக்கப்படுவதாக அங்கு வசிக்கும் மக்கள் அரச அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்திருந்தனர். ஆனால், அந்த முறைப்பாட்டின் மீது எதுவித நடவடிக்கைகளும் எடுக்காமல் கடலட்டை அமைப்பதை ஊக்குவிப்பது போல அரச அதிகாரிகளின் நடவடிக்கைகள் அமைந்தமையால், பாதிக்கப்பட்ட மக்கள் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கை தொடுத்திருந்தார்கள்.*

*ஏற்கனவே, உருவாக்கப்பட்ட பண்ணைகளை இடைநிறுத்துவதுடன், புதிதாக அமைக்கும் பணிகளை முன்னெடுக்காத வண்ணம் ஒரு கட்டளையை இயற்றுமாறும் எழுத்தாணை மனு ஊடாக கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.*

*அந்தவகையில், கடந்த மாதம் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மனுவில் குறிப்பிடப்பட்ட அரச அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்ததுடன், வழக்கு அழைக்கப்பட்டிருந்தது. எனினும், அவர்கள் சார்பாக அரச சட்டத்தரணி தோன்றாமையால் அந்த வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.*

*அத்துடன், அந்தபகுதியில் சட்டமுறையற்ற வகையில் பண்ணை அமைத்துள்ளமைக்கு மக்கள் ஆட்சேபம் வெளியிட்டுள்ளனர். பல பேருக்கு முறையற்ற வகையில் உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது.*

*அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் அது வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த பகுதியில் பண்ணை அமைப்பதற்கான சூழல் இல்லாமையுடன், அதற்காக கடல் பிராந்தியத்தையும் மறைத்து பாரம்பரியமாக மீன்பிடி தொழிலை முன்னெடுப்பவர்கள் பாதிக்கப்படும் வண்ணம் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அதற்கு அரச அதிகாரிகள் துணைபோயுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.*

*நேற்றுமுன்தினம், நீதிமன்றில் அந்த அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர். தாங்கள் சரியான முறைப்படியே அதனை செய்துள்ளதாக நீதிபதிக்கு பதில் அளித்துள்ளனர். எனினும், மக்களின் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, எதிர்வரும் ஐந்தாம் மாதத்துக்கு வழக்கை தவணையிட்டுள்ளார். (ஐ)*

# விவசாய குடும்பங்களுக்கு யு. எஸ். எய்ட் நிதியுதவி!

*கொழும்பு, மார்ச் 25*

*சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரமைப்பு (யு. எஸ். எய்ட்) ஆறு மாவட்டங்களிலுள்ள 48 ஆயிரம் விவசாய குடும்பங்களுக்கு இந்த சிறு போகத்தில் நிவாரண உதவித் தொகையை வழங்கியுள்ளது.*

*நாட்டில் ஓர் ஏக்கருக்கும் குறைவான நெல் பயிரிடும் 48 ஆயிரம் குறைந்த வருமானம் கொண்ட விவசாயக் குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு தவணைகளில் ஒரு குடும்பத்துக்கு 30 ஆயிரம் ரூபாயை வழங்க யு. எஸ். எய்ட் இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.*

*முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய ஆறு மாவட்டங்களில் ஓர் ஏக்கருக்கும் குறைவான நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயக் குடும்பங்களுக்கு மானியம் வழங்கப்படவுள்ளது.*

*விவசாயக் குடும்பங்களை உள்ளடக்கிய இவ் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு இந்தக் கொடுப்பனவு உதவியாக இருக்கும். கடந்த பெரும் போகத்தில் தலா ஒரு மூடை யூரியா உரம் இலவசமாக வழங்கப்பட்டது.*

*எவ்வாறாயினும், கடந்த பெரும் போகத்தில், அரசாங்கம் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளின் ஆதரவுடன் விவசாயிகளுக்கு ஒரு விவசாய குடும்பத்திற்கு ஒரு இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. (ஐ)*

# நான்கு தமிழக மீனவர்கள் விடுதலை!

*யாழ்ப்பாணம், மார்ச் 25*


*கடந்த 12ஆம் திகதி, இந்திய மீனவர்கள் நால்வர் எல்லை தாண்டி, இலங்கை - காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.*

*இதன்போது மீன்பிடிக்குப் பயன்படுத்திய படகு ஒன்றையும் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். இந்த மீனவர்களின் வழக்கு, ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.*

*இதன்போது, நான்கு மீனவர்களையும் நிபந்தனையுடன் விடுதலைசெய்தது நீதிமன்றம்.*

*படகின் உரிமையாளரும் படகில் இருந்தமையால் படகு பறிமுதல் செய்யப்படுவதாக ஊற்காவற்றுறை நீதிமன்று கட்டளை பிறப்பித்தது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 25 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 11
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும், அலைச்சலும் இருக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**இடபம்**
பழைய கசப்பான சம்பவங்களை பேசிக் கொண்டிருக்க வேண்டாம். வீண் செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மிதுனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**கடகம்**
மற்றவர்களின் ரசனைக்கேற்ப உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உயரதிகாரி உங்களை நம்புவார்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உடல்நலம் பாதிக்கும். வியாபாரத்தில் சொந்தமாக முடிவு எடுக்க பாருங்கள்.

**துலாம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**தனுசு**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்கள் உணர்வுகளைப் புரிந்து உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த குழப்பம் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். இழுபறி வேலைகள் முடியும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். புதிய பாதை தெரியும் நாள்.

# தமிழக மீனவர்கள் கைது; இந்தியாவுக்கான சவால்!

## பாட்டாளி மக்கள் கட்சி

சென்னை, மார்ச் 25

தமிழக மீனவர்களை கைது செய்வது இந்தியாவுக்கு விடுக்கப்படும் சவால் ஆகும். அதை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "வங்கக் கடலில் மீன் பிடித்த12 மீனவர்களை அவர்களின் இரு படகுகளுடன் இலங்கை கடற்படை கைது செய்திருக்கிறது. இலங்கைப் படையின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

வங்கக் கடலில் தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்து மீன்பிடிக்க அவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. அதை மதிக்காமல் தமிழக மீனவர்களை கைது செய்வது இந்தியாவுக்கு விடுக்கப்படும் சவால் ஆகும். அதை மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது.

வங்கக் கடலில் இலங்கைப் படையினர் நிகழ்த்தும் அத்துமீறலுக்கு மத்திய அரசு நிரந்தரமாக முடிவு கட்ட வேண்டும். இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 28 தமிழக மீனவர்களை அவர்களின் படகுகளுடன் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்", என்று கூறியுள்ளார்.

# நீதிமன்ற அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும்!

## ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, மார்ச் 25

சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்று தற்போது நடைபெற்று வரும் சட்டப் பேரவைக் கூட்டத்தில் மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், "சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்கும் திட்டத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால், அதை செயல்படுத்த முடியாது என்று நடுவண் அரசு தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் முடிவு என்பது நீண்ட நாட்களுக்கு முந்தையது என்பதாலும், அதன்பின் சூழ்நிலை மாறியிருப்பதாலும் தமிழை உயர் நீதிமன்ற அலுவல் மொழியாக்கும் முயற்சி மீண்டும் தொடங்கப்பட வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதிபதியான சந்திர சூட் அவர்களும் இதற்கு ஆதரவாகவே இருக்கிறார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் வெளியிடப்படும் என்று 20.01.2023ம் நாள் அறிவித்த அவர், அதை கடந்த குடியரசு நாள் முதல் நடைமுறைப்படுத்தியும் வருகிறார். சென்னை உயர் நீதிமன்றத்தில் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் முடிவெடுத்தபோது, இத்தகைய மாற்றங்கள் நிகழும் என்பதை நம்மில் எவரும் நினைத்துக் கூட பார்த்திருக்க முடியாது.

இப்போது மாறியிருக்கும் காலச்சூழலை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்று தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தில் மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி நடுவண் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் - என்று கூறியுள்ளார். (ஐ)

# தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸினர் போராட்டம்!

சென்னை, மார்ச் 25

ராகுல் காந்திக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் காங்கிரஸ் கட்சியினர் நேற்று முன்தினம் முதல் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மோடி என்ற பெயரை பயன்படுத்தி சர்ச்சையாக பேசியது தொடர்பான அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைதண்டனை விதித்து குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை வருவதற்காக கும்பகோணம் ரயில் நிலையத்தில் காத்திருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, செய்தி அறிந்ததும், அந்த ரயில்நிலையத்தில் தான் செல்ல இருந்த ரயிலை மறித்து தொண்டர்களுடன் போராட்டம் நடத்தினார். (ஐ)

# அ. தி. மு. க. கட்சியுடனான கூட்டணியில் குழப்பமில்லை

## பா. ஜ. க. தலைவர் அறிவிப்பு

மதுரை, மார்ச் 25

"தமிழகத்தில் அ. தி. மு. க. , பா. ஜ. க. கூட்டணியில் எந்த வித குழப்பமில்லை. நான் உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தது வழக்கமானதே" என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்துப் பேசினார். அந்த சந்திப்பு பற்றி பல்வேறு ஊகங்கள் நிலவி வந்தன. அ. தி. மு. கவுடனான கூட்டணியை முறித்துக் கொள்ள அண்ணாமலை அமைச்சர் அமித்



ஷாவிடம் வலியுறுத்தினாரென தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், "தமிழகத்தில் பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணியில் எந்தக் குழப்பமும் இல்லை. நான் டில்லி சென்று அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தது தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அமித் ஷாவுடனான எனது சந்திப்பு வழக்கமானதே.

இந்த சந்திப்பின்போது பா. ஜ. க. வளர்ச்சி, கட்சிப் பணிகள் பற்றி பேசினேன். தமிழக அரசியல் நிலவரம் பற்றி பேசினேன். தமிழகத்தில் பா. ஜ. கவை வலிமையாக்குவது குறித்து பேசினேன்.

நாங்கள் தமிழகத்தில் வேகமாக வளர வேண்டும் என்ற முனைப்பில் உள்ளோம். பா. ஜ. க. மக்கள் செல்வாக்கைப் பெற விரும்புகிறது. ஆளும் கட்சியாக வளர விரும்புகிறது. அது குறித்தே பேசினேன். மேலும், கூட்டணி விவகாரங்களில் பா. ஜ. க. மத்தியக் குழுதான் எந்த ஒரு முடிவும் எடுக்கும். ஆகையால் நான் கூட்டணி விவகாரங்கள் பற்றி ஏதும் பேசவில்லை - என்றார்.

ஈழநாடு



# இலங்கையில் நல்லிணக்கத்துக்கு தென்னாபிரிக்கா நிச்சயம் உதவும்

## அந்நாட்டு சர்வதேச உறவு அமைச்சர் உறுதி

கொழும்பு, மார்ச் 25

**இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு தென்னாபிரிக்கா உதவுமென அந்த நாட்டின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் நலேடி பாண்டோர் தெரிவித்தார்.**

அமைதி மற்றும் சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்கில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ள பிரதிநிதிகள் குழுவிடமே அமைச்சர் நலேடி பாண்டோர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையர்களைச் சந்திக்கும் நோக்கில் இலங்கையின் அமைச்சர் குழுவினர் அங்கு சென்றுள்ளனர்.

இந்தநிலையில் இந்த விடயத்தில் கூடிய அறிவைக் கொண்ட ஜனாதிபதி சிறில் ரமபோசாவுடன் அவர்கள் விரிவான கலந்துரையாடல்களை நடத்தியதுடன் அரசியல் தலைவர்கள் சிலரையும் சந்திக்கவுள்ளனர்.

(அ)

# மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 25

மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வர்த்தகர்கள் வராத காரணத்தினால் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் மொத்த விலைகள் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுடன் ஒப்பிடுகையில் மரக்கறிகளின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், இதன் காரணமாக விவசாயிகள் உற்பத்திச் செலவை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் உருளைக்கிழங்கு, சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம் போன்றவற்றின் விலைகள் குறைந்து வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

(அ)

# முக்கிய 7 அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கு அலகு

கொழும்பு, மார்ச் 25

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் தனியார்மயமாக்கலுக்கு உதவ, அரசாங்கம் நிதி அமைச்சகத்தின் கீழ் அரசுக்கு சொந்தமான நிறுவன மறுசீரமைப்பு அலகு என்ற ஒரு பிரிவை அமைத்துள்ளது.

அரசுக்குச் சொந்தமான நிறுவனத்துறை உட்பட ஆழமான பொருளாதார சீர்திருத்தங்களைச் செயல்படுத்த அரசாங்கம் செயல்பட்டு வருவதாகவும், பொருளாதாரம் முழுவதும் போட்டித்தன்மை, உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் என்றும் நிதி அமைச்சு கூறுகிறது.

இவ்வாறு, சிறிலங்கன் எயார்லைன்ஸ் (சிறிலங்கன் கேட்டரிங் உட்பட), இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லங்கா மருத்துவமனை, சிறிலங்கா ரெலிகொம், கேன்வில் ஹோல்டிங் (கிராண்ட் ஹயாட் ஹோட்டல்), ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிடெட் (ஹில்டன் ஹோட்டல்), லிட்ரோ காஸ் கம்பனி ஆகியவை பிரதான அரச நிறுவனங்களாகும்.

மேற்கூறிய நிறுவனங்களுக்கு பரிவர்த்தனை ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கும், பங்கு உரிமையை மாற்றுவதற்கு அவர்களுக்கு உதவுவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை மற்றும் தகுதி வாய்ந்த ஆலோசனை நிறுவனங்கள் அல்லது மேம்பாட்டு நிதி நிறுவனங்கள் இதன் மூலம் நியமிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# கைகளைத் துண்டாக வெட்டி சென்றவர் நீதிமன்றில் சரண்

கொழும்பு, மார்ச் 25

கூரிய ஆயுதத்தால் ஒருவரை கொடூரமாக தாக்கி அவரது கையை துண்டாக்கி அதனை எடுத்துச் சென்றிருந்த சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

சந்தேக நபர் சட்டத்தரணி ஊடாக மொரட்டுவை நீதவான் நீதிமன்றில் சரணடைந்தார் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி மொரட்டுவை கொரலவெல்ல பிரதேசத்தில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் சந்தேக நபர் பழிவாங்கும் நோக்கில் குறித்த நபரின் கையை வெட்டியுள்ளார்.

தாக்குதலுக்குப் பிறகு, பாதிக்கப்பட்டவரின் கைகள் மணிக்கட்டுப் பகுதியில் இருந்து துண்டிக்கப்பட்டிருந்ததோடு, அதனை அவர் கொண்டுச் சென்றிருந்தார்.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர் அதே பகுதியை சேர்ந்த 40 வயதுடையவராவார்.

சந்தேகநபர் இதற்கு முன்னரும் ஒருவரின் கையை வெட்டியிருந்தார். அவரது கையை வைத்தியர்கள் ஒன்று சேர்த்திருந்தனர். இந்த நிலையிலேயே தற்போது இவ்வாறு வெட்டப்பட்ட கையைச் சந்தேகநபர் எடுத்துச் சென்றார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சு.க பொதுச் செயலாளராக மீண்டும் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, மார்ச் 25

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தயாசிறி ஜயசேகர மீண்டும் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் பணிகளை ஆரம்பித்தார்.

தயாசிறி ஜயசேகர வெளிநாடு சென்றிருந்த நிலையில், அந்த பதவிக்கான பணிகளைக் கவனிக்க சரத் ஏக்கநாயக்கவை நியமிக்கக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க மைத்திரிபால சிறிசேன யோசனை

கொழும்பு, மார்ச் 25

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கவேண் டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன யோசனை முன்வைத்தார்.

ஊழல்வாதிகள், திருடர்கள், குடும்ப அரசியல் இல்லாமல் சுத்தமானவர்களைக் கொண்டு அந்த அராங்கத்தை உருவாக்குவதே நாட்டைக் கட்டி யெழுப்புவதற்குள்ள ஒரே வழி என மைத்திரிபால சிறிசேன கூறினார்.

எவரேனும் ஜனாதிபதிப் பதவியை வெல்வதை இலக்காகக் கொண்டு செயற்பட்டால் அதனைச் செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தடை செய்யப்பட்ட சில பொருட்கள் மீண்டும் இறக்குமதி செய்ய அனுமதி

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக இறக்குமதி தடை நீக்கப்பட வேண்டும் என்பதற்கு அமைய இதற்கமைய தடை செய்யப்பட்ட 101 வகையான பொருட்களை மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனம் உட்பட உலோகங்கள், கேக், பிளாஸ்டிக், சீஸ், இறப்பர், மரச்சாமான்கள், சோப்புகள், காய் கறிகள் உள்ளிட்ட பொருட்களுக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நீரில் மூழ்கிய அண்ணனும் தங்கையும் சடலங்களாக மீட்பு

## பதுளையில் சோகம்

கொழும்பு, மார்ச் 25

ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகொட பகுதியில் இரு சிறார்கள் நேற்று முன்தினம் நீரில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல்போயிருந்த நிலையில், நேற்றுக் காலை ஒருவரும், முற்பகல் இன்னுமொருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்..

நீர் வடிந்தோடும் வடிகானில் 8 சிறுமியும், 10 வயதுடைய சிறுவனும் (அண்ணன், தங்கை) அடித்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கடும் மழையால், போகொட கொட்டியாமலுவ பிரதேசத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து வடிகாலுக்கு அப்பால் உள்ள வீட்டுக்கு தனது தாய் சென்றுள்ளதாகவும் தாயை அழைத்து வருவதற்காக சென்ற இரண்டு சிறுவர்களும் நீர் வடிகால் ஒன்றைக் கடப்பதற்கு முற்பட்ட வேளை வடிகானில் நீர் அதிகளவில் வந்தமையால் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குறித்த இரண்டு சிறுவர்களும் போகொட வித்தியாலயத்தில் தரம் ஐந்து மற்றும் தரம் இரண்டில் கல்வி கற்கும் சகோதரர்கள் ஆவர்.

வடிகானில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் செருப்பும், சாரமும், சிறிய கூடை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 25

பண்டிகை காலத்தை முன்னிட்டு, நுகர்வோர் விவகார அதிகார சபையினர், நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதான மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள், களஞ்சியங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், நடமாடும் வர்த்தகர்களையும், மலிவு விற்பனை சந்தைகளையும், சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (அ)

# வங்கி வட்டி குறைவடையும்

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படும் நீட்டிக்கப்பட்ட கடன் வசதி எதிர்காலத்தில் இலங்கையில் வட்டி விகிதங்களைக் குறைக்க உதவும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த கடன் வசதி கிடைக்காவிட்டால் அரசாங்கம் அதிக வட்டிக்கு நிதியை வசதிகளை பெற்றிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

தொலைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

மூன்றாவது அல்லது நான்காம் காலாண்டுக்குள் இலங்கையின் பணவீக்கத்தை ஒற்றை பெறுமதிக்கு கொண்டு வர முடியும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள் விநியோகம் முழுமையாக தடைப்படும்!

## எரிசக்தி அமைச்சருக்கு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

**நாட்டில் எரிபொருள் விநியோகம் முழுமையாக தடைப்படும் அளவுக்கு தொழிற் சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனப் பணியாளர்களின் தொழிற்சங்கங்கள், அமைச்சர் காஞ்சன விஜயசேக ரவை எச்சரித்துள்ளன.**

இது குறித்து அமைச்சர் தெரிவிக்கையில்-

எதிர்வரும் நாட்களில் நாட் டில் எரிபொருள் விநியோகம் தடைப்படும் அளவுக்கு பாரிய போராட்டம் ஒன்று முன்னெ டுக்கப்படும் என எச்சரித்து, பெற்றோலிய கூட்டுத்தாபனத் தின் தொழிற்சங்கம் எனக்கு கடி தம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மேலதிக மாக மேலும் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்க அனுமதிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் தீர்மா னத்துக்கு எதிராகவே இந்த போராட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இவ்வாறான போராட்டங் கள் நியாயமற்றவை என்ப தோடு, முழுமையான அரசியல் நோக்கத்திலானவை-என்றார். (அ)

# காசநோய் தொடர்பில் விழிப்புணர்வு பேரணி

வவுனியா, மார்ச் 25

வவுனியாவில் காச நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

உலக காச நோய் தினமான நேற்று வவுனியா மாவட்ட வைத்தியசாலை காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்பு ணர்வு பேரணி இடம்பெற் றது.

இதன்போது காச நோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்று காலை 9.30 மணிக்கு காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலகத்தில் நடை பெற்றது.

இதன் பின்னர் காச நோயை முடிவுக்குக் கொண்டு வர முத லிடுவோம், உயிர்களைக் காப் பாற்றுவோம் எனும் தொனிப் பொருளில் மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகை யில் இந்த பேரணி நடத்தப்பட் டது.

இப்பேரணி காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து புதிய பஸ் நிலையம் ஊடாக சென்று பின்னர் ஏ-9 வீதி யூடாக ஹொரவப்போத்தானை வீதியை அடைந்து பஜார் வீதியூடாக வவுனியா மணிக் கூட்டுக் கோபுரத்தை அடைந்து மீண்டும் வைத்தியசாலையை வந்தடைந்தது. (அ)



# மொட்டு கட்சிக்குள் வெடித்தது சர்ச்சை!

கொழும்பு, மார்ச் 25

கடந்த மே மாதம் 9ஆம் திகதி காலி முகத்திடல் போராட் டத்தின் மீதான தாக்குதலுக்கு மொரட்டுவ முன்னாள் மேயர் சமன்லால் பெர்னாண்டோவே காரணம் என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப் பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் எதிர்கால அரசியல் செயற்பாடு கள் தொடர்பில் கலந்துரை யாடுவதற்காக கட்சிப் பிரதிநிதி கள் விசேட சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் அரசியல் நட வடிக்கைகள் மற்றும் மே மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள பேரணி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போதே கடந்த மே மாதம் 9ஆம் திகதி காலி முகத் திடல் போராட்டத்தின் மீதான தாக்குதலுக்கு மொரட்டுவை முன்னாள் மேயர் சமன்லால் பெர்னாண்டோவே காரணம் என பஸில் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

இதனால் சமன்லால் பெர் னாண்டோவுக்கும் பஸில் ராஜ பக்ஷவுக்கும் இடையில் கார சாரமான கருத்து பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இந்திய பெற்றோலிய செயலாளர், ஐ.ஓ.சி தலைவர் இலங்கை வருகை

கொழும்பு, மார்ச் 25

இந்தியாவின் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் பங்கஜ் ஜெயின் மற்றும் இந்தி யன் ஒயில் கோர்ப்பரேஷன் லிமிடெட்டின் தலைவர் ஷிர் காந்த் மாதவ் வைத்யா ஆகியோர் இலங்கைக்கு வருகை தரவுள்ள னர் என அறிய முடிகின்றது.

நாட்டுக்கு வரும் இருவரும், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க் கப்படுகின்றது. இந்தியன் ஒயில் கோர்ப்பரேஷனின் செயல்பாடு களை அந்த நாட்டின் பெற்றோ லியம் மற்றும் இயற்கை அமைச்சு மேற்பார்வையிடுகிறது

கடந்த ஆண்டின் முற்பகுதி யில், லங்கா ஐ.ஓ.சி பிஎல்சி மற்றும் இலங்கை அரசின் கீழ் வரும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து டிரின்கோ பெற் றோலியம் டேர்மினல் என்ற கூட்டு முயற்சியை உருவாக்கின.

இதனையடுத்து குறித்த நிறு வனம் தனது வலையமைப்பை மேலும் 50 நிரப்பு நிலையங்க ளுடன் விரிவுபடுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து அண்மையில் அனு மதியை பெற்றுக்கொண்டது.

இந்த நிலையில் இவர்கள் இரு வரின் விஜயம் அமையவுள்ளது.

# நீதித்துறையை அச்சுறுத்துவதை அரசு உடனே நிறுத்தவேண்டும்!

## சிவில் சமூகத்தினர், கல்விமான்கள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 25

நீதித்துறையை அச்சுறுத்து வதை கைவிடவேண்டும், ஜனநாயகத்தை குறைமதிப்புக்கு உட்படுத்துவதை கைவிட வேண்டும், தேர்தலை நடத்த வேண்டும் என சிவில் சமூகப் பிரதிநிதிகள் பலர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

பாராளுமன்ற உறுப்பினர் களின் சிறப்புரிமையை உயர் நீதிமன்றம் மீறியுள்ளது என்ற பொய்யான சாக்குப்போக்கு டன் நீதித்துறையை அச்சுறுத்து வதற்கு ஜனாதிபதியும் அர சாங்கத்தின் சில உறுப்பினர்க ளும் மேற்கொள்ளும் முயற்சி களை திகைப்புடன் அவதானிப் பதாக சிவில் சமூக பிரதிநிதிகள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வழங்காமலிருப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத் துக்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதை தொடர்ந்தே இந்த குற்றச்சாட் டுகள் எழுந்துள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2023 இல் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற் காக ஒதுக்கப்பட்ட நிதியை எந்த அரச ஸ்தாபனமும் நிறுத்திவைப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது என அவர்கள் கூறினர்.

நாட்டின் ஜனநாயகச் செயற் பாடுகளை குறைமதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள இந்த புதிய நடவ டிக்கைகளை நாங்கள் கடுமை யாக கண்டிக்கின்றோம் என தெரிவித்துள்ள அவர்கள், இந்த விடயத்தில் இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் குறிப் பிட்டனர். (அ)

# இலங்கைக்கு அடுத்த கட்டம் சிரமமானதாகவே அமையும்!

## அனுர பிரியதர்ஷன யாப்பா எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியத் தின் உதவி கிடைத்து விட்ட தாக தெரிவித்து மகிழ்ச்சியை சிலர் வெளிப்படுத்தினாலும் அடுத்த கட்டம் கடினமானதா கவே இருக்கும் என நாடாளு மன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இலங்கை இணங்கியுள்ள தற்கு அமையவே சர்வதேச நாணய நிதியம் கடனை வழங்கி யுள்ளது. அந்த நிபந்தனை களை நிறைவு செய்யாமல் விடும் பட்சத்தில் அடுத்த கட்டம் சிரமமமானதாகவே அமையும். அடுத்த கட்டத்தில் நிதி கிடைக்காமலும் போகலாம்.

நிலைமை தொடர்பான புரிதல் இல்லாதவர்களை அரு கில் வைத்துக் கொண்டதன் காரணமாக நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது-என்றார்.



# அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக எதிரணி எம்.பிக்கள் கையொப்பம்!

கொழும்பு, மார்ச் 25

நீதித்துறையின் கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் அர சாங்கத்தின் முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டறிக்கை யில் கையெழுத்திட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஆகிய வற்றை பிரதிநிதித்துவப்படுத் தும் பாராளுமன்ற உறுப்பினர் கள் பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந் திரம் முன்னெப்போதும் இல் லாத நெருக்கடியை எதிர் நோக்கி வருகின்றன. எனவே அதற்கு எதிராக கூட்டு நட வடிக்கை தேவை எனவும் கூட் டறிக்கையில் வலியுறுத்தப்பட் டுள்ளது. (அ)

# வவுனியா அரச விவசாயப் பண்ணையை பிரதேச செயலரிடம் ஒப்படைக்க உத்தரவு

## வடக்கு மாகாண ஆளுநர் விடுத்தார்

வவுனியா, மார்ச் 25

**வவுனியா - யாழ்.வீதியில் அமைந்துள்ள அரச விதை உற்பத்தி விவசாயப் பண்ணையை பிரதேச செயலாளரை பொறுப்பேற்குமாறு வடக்கு மாகாண ஆளுநரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரால் 10.03.2023 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வவுனியா விஜயத்தின்போது அபிவிருத்திக் குழுவின் தலைவர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்கான விவசாயப் பண்ணைக்கு ஓமந்தைப் பகுதியில் 100 ஏக்கர் காணி வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தற்போது விவசாயப் பண்ணை உள்ள 65 ஏக்கர் காணியை அபிவித்திச் செயற்பாடுகளுக்காக பொறுப்பேற்குமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த காணியை வவுனியா பொருளாதார மத்திய நிலையம் மற்றும் சர்வதேச கிரிக்கட் மைதானத்துக்காக கோரியபோது அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்டில் தடுப்பில் சிக்கி 7 மாதக் குழந்தை பலி!

கொழும்பு, மார்ச் 25

ஊவாபரணகம, மஸ்பன்ன கிராமத்தில் கட்டிலை சுற்றி பொருத்தப்பட்டிருந்த தடுப்பில் சிக்கி ஏழு மாதப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஸ்பன்ன வெலேக்கடே வீடொன்றில் வசித்து வந்த ஹர்ஷனி மதுஷிகா என்ற ஏழு மாதப் பெண் குழந்தையே படுக்கையில் இருந்து வீழ்ந்து தடுப்பில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் தாய் வீட்டில் வேலையில் ஈடுபட்டிருந்தநிலையில், குழந்தை உறங்கிக்கொண்டிருந்த படுக்கையறைக்கு அருகில் வந்து பார்த்தபோது, கட்டிலைச் சுற்றியிருந்த தடுப்பில் குழந்தை மாட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு உடனடியாக மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார். ஆயினும் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தியத்தலாவை ஆரம்ப வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# தவக்கால ஆற்றுகை ஞாயிறன்று மணற்காட்டில்

வடமராட்சி, மார்ச் 25

மணற்காடு புனித அந்தோனியார் ஆலய பங்கு மக்கள் பெருமையுடன் வழங்கும் கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை சித்தரிக்கும் தவக்கால ஆற்றுகை திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 26 ஆம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணியளவில் மணற்காடு புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த திருப்பாடுகளின் காட்சி மணற்காடு மண்ணில் முதல் முறையாக மேடை ஏறுகிறது.

பங்குத்தந்தை அருட்பணி யோண் குருஸ் அடிகளாரின் வழிகாட்டலில், அருட்பணி மரிய சேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவான பலிக்களம் திருப்பாடுகளின் காட்சி அன்று யூலியஸினால் நெறியாள்கை செய்யப்படுகின்றது.

130இற்கும் மேற்பட்ட கலைஞர்களை உள்ளடக்கி 100அடி அகன்ற மேடையில் பிரமாண்டமான தயாரிப்பாக உயிரோட்டமாக ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

# தொலைத்தொடர்பு கட்டணங்களில் மாற்றம் குறித்து தீர்மானம் இல்லை

கொழும்பு, மார்ச் 25

தொலைத்தொடர்பு கட்டணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு உத்தியோகபூர்வ கோரிக்கையும் இதுவரை விடுக்கப்படவில்லையென இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளமையினால், செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்துள்ளதாகவும், தமக்கு நிவாரணம் வழங்குமாறு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கலந்துரையாடல்களின்போது கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் ஹெலசிறி ரணதுங்க குறிப்பிட்டார்.

இருப்பினும், இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்படவில்லை என அவர் கூறினார்.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதனால், இறக்குமதிச் செலவுகள் குறைவடையும் என ஹெலசிறி ரணதுங்க தெரிவித்தார்.

இருப்பினும், டொலரின் பெறுமதி வீழ்ச்சியைக் கருத்திற்கொண்டு உடனடியாக கட்டணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

மின்சாரக் கட்டணம் குறைவடைந்தால், தொலைத்தொடர்பு கட்டணங்களை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இறுதியாக கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோது மின்சாரக் கட்டண உயர்வு உள்ளீட்ட காரணிகள் கருத்திற்கொள்ளப்படவில்லை என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் ஹெலசிறி ரணதுங்க கூறினார். (அ)

# உயர்தரத்துக்கான செயன்முறை பரீட்சைகள் 28ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 25

2022 கல்வி பொது தராதர உயர் தர பரீட்சைக்கான செயன்முறை பரீட்சைகளை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயன்முறை பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள் அறிவித்துள்ளது.

அனுமதி அட்டைகளை பரீட்சைகள் திணை க்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மனைப்பொருளியல், பரதநாட்டியம், கீழைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், மேலைத்தேய சங்கீதம் மற்றும் மும்மொழிகளுக்குமான நாடகமும் அரங்கியலும் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு செயன்முறைப் பரீட்சார்த்திக்கும், பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய திகதி, நேரம், இடம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவற்றை எக் காரணம் கொண்டும் மாற்ற முடியாது எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏனைய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளை எதிர்காலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# 633 கிலோ பீடி இலைகளுடன் ஐந்து பேர் சிலாபத்தில் கைது



கொழும்பு, மார்ச் 25

சிலாபம் கரையோரக் கடற்படையினர் நேற்று அதிகாலை சிலாபம் இரணைவில பிரதேசத்தில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது லொறியொன்றைச் சோதனை செய்தனர்.

இதன்போது சூட்சுமமான முறையில் மறித்து வைத்திருந்த 633 கிலோ 650 கிராம் பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன்போது பீடி இலைகளை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு டிங்கி படகுகள், இரண்டு லொறிகள், ஒரு கார், ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் கூறினர்.

குறித்த பீடி இலைகள் சுமார் 1 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியென மதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# டெங்கு, இரத்த பரிசோதனைகளுக்கு அதிக கட்டணம் அறவிட்ட தனியார் வைத்தியசாலைகளுக்கு அபராதம்

கொழும்பு, மார்ச் 25

டெங்கு பரிசோதனை மற்றும் முழுமையான இரத்த பரிசோதனைக்கு கட்டுப்பாட்டு கட்டணத்தை விட அதிகமாக அறிவிட்ட 08 தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வு கூடங்களுக்கு 55 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்கடை, நுகேகொடை நீதவான் நீதிமன்றங்களில் நுகர்வோர் விவகார அதிகார சபை தாக்கல் செய்த வழக்குகளிலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலுக்கான துரித இரத்தப் பரிசோதனைக்குரிய உச்சபட்ச கட்டணம் 1200 ரூபாவாகும். எனினும், இதற்காக 3000 ரூபா வரை கட்டணம் அறிவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முழுமையான இரத்த பரிசோதனைக்கான உச்சபட்ச கட்டணமாக 400 ரூபா அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு 1000 ரூபா வரை அறவிடப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையை விட, அதிகக் கட்டணம் அறவிட்டமை தொடர்பில் மேலும் 10 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 2 வருடங்களில் 25,000 படையினர் பணியில் இருந்து வெளியேறினர்!

கொழும்பு, மார்ச் 25

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 25,000 இராணுவத்தினரும் 1,000 பொலிஸாரும் பணியிலிருந்து விலகியுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் சுமார் 1,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவிகளைவிட்டு வெளியேறியுள்ளதாகவும், இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் சுமார் 200 பொலிஸ் அதிகாரிகள் பதவிகளை விட்டு விலகியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள்:

## இராணுவம் கடந்த காலத் தவறுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய தருணம் வந்திருக்கிறது!

கடந்த வாரம் வரலாற்று முக்கியத்துவம் மிக்க வழக்கொன்றின் போது 2019 மே மாதம் இராணுவத்திடம் சரணடைந்த மூன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டுமென வவுனியா உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது. அந்த மூன்று உறுப்பினர்களும் அன்று தொடக்கம் காணாமற் போயிருப்பதுடன், அவர்களுடைய மனைவிமார் அது தொடர்பாக ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்கள்.

தமது கணவன்மாரை இராணுவத்திடம் ஒப்படைத்ததாக அப்பெண்கள் வழங்கிய சாட்சியத்தை தான் நம்புவதாகக் கூறிய நீதிபதி, இராணுவம் அவர்களை ஆஜர் செய்யத் தவறினால் அந்த நபர்கள் காணாமற் போன சந்தர்ப்ப சூழ்நிலைகளை எடுத்து விளக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

ஓர் ஆட்கொணர்வு மனு என்பது, பொது அல்லது தனியார் கட்டுக்காவலின் கீழ் சட்ட விரோதமாக அல்லது பொருத்தமற்ற விதத்தில் வைக்கப்பட்டிருக்கும் நபரொருவரை ஆஜர்படுத்துமாறு நிர்ப்பந்திப்பதற்கு, அவரை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்வதற்கு அல்லது சட்டத்தின் பிரகாரம் அந்த விடயத்தைக் கையாளுமாறு கேட்டுக் கொள்வதற்கு கிடைக்கும் ஒரு நிவாரணமாகும். இராணுவத் தளபதி, 58ஆவது படையணியின் தளபதி மற்றும் முல்லைத்தீவு இராணுவ முகாமின் கட்டளை அதிகாரி ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த விண்ணப்பங்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், சம்பவம் நடந்த இடம் தொடர்பாக நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் இது தொடர்பாக ஒரு விசாரணையை நடத்தி, அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென வவுனியா மேல் நீதிமன்றம் பணிப்புரை வழங்கியிருந்தது. இந்த விசாரணை முடிவடைவதற்கு ஒன்பது ஆண்டுகள் எடுத்தன.

போரின் கடைசி நாட்களின் போது ஷெல் தாக்குதல்கள் மற்றும் குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்காக தாம் தப்பியோடிய போது நிலவிய கடும் திகில் மற்றும் குழப்ப நிலை என்பவற்றை அப்பெண்கள் எடுத்து விளக்கியிருந்தார்கள். அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்தை சென்றடைந்த பொழுது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரும் இருப்பின் அவர்கள் சரணடைய வேண்டுமென்றும், ஒரு விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த நிலையில், அப்பெண்கள் தமது கணவன்மார் சரணடைய வேண்டுமென அவர்களைத் தூண்டினார்கள். அது தமது கணவன்மாரை அவர்கள் பார்த்த கடைசித் தடவை என்றும், இராணுவ ஆளணியினர் அவர்களை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் ஏற்றி, எடுத்துச் சென்றதைப் பார்த்ததாகவும் அப்பெண்மணிகள் கூறினார்கள்.

58ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்தன இராணுவத்தின் சார்பில் சாட்சியமளிப்பதற்கென சட்டமா அதிபரினால் அழைக்கப்பட்டிருந்தார். எவரும் கைது செய்யப்பட்டதனையோ அல்லது தடுத்து வைக்கப்பட்டதனையோ அவர் மறுத்தார். ஆனால், குறுக்கு விசாரணையின் போது 2009 மே 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்களில் ஆட்கள் இராணுவத்திடம் சரணடைந்ததையும், அவ்விதம் சரணடைந்தவர்கள் தொடர்பான ஒரு பதிவேட்டை இராணுவம் வைத்திருந்தது என்பதனையும் அவர் ஏற்றுக் கொண்டார். எவ்வாறிருப்பினும், மேஜர் ஜெனரல் குணவர்தன அந்தப் பதிவேட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறினார். ஆனால், அதற்குப் பதிலாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த ஒரு பதிவேட்டை அவர் எடுத்து வந்திருந்தார்.



அந்த மூன்று நபர்களும் இராணுவத்திடம் சரணடைந்திருந்தார்கள் என அளிக்கப்பட்ட சாட்சியம் குறித்து நீதி மன்றம் திருப்தியடைந்திருப்பதாகக் கூறிய நீதிபதி, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவது இராணுவத்தின் பொறுப் பாகுமென சொன்னார். இராணுவம் மார்ச் 22 ஆம் திகதி அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலும் இதே மாதிரியான ஒரு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. போரின் இறுதிக் கட்டத்தின் போது முல்லைத்தீவில் வைத்து தனது குடும்ப உறுப்பினர்களால் ஆயுதப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரொருவரை ஆஜர்படுத்த வேண்டுமென வவுனியா உயர்நீதிமன்றம் இராணுவத்துக்கு கட்டளையிட்டது.

இராணுவம் அந்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தத் தவறினால் அவர் காணாமற்போன சந்தர்ப்ப சூழ்நிலைகளை அது எடுத்து விளக்க வேண்டுமெனக் கூறிய நீதிமன்றம், அதனை நிரூபிக்கும் பொறுப்பை இராணுவம் கொண்டிருப்பதாக மேலும் கூறியது.

இராணுவத்தின் சார்பில் சாட்சியமளித்த சாட்சி ஒருவர் குறிப்பிட்ட தினத்தின் போது சரணடைந்தவர்களை ஆவணப்படுத்திய ஒரு பதிவேடு இருப்பதை ஏற்றுக் கொண்ட பின்னர், காணாமல்போன நபர் ஆயுதப் படையினரின் கட்டுக்காவல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தார் என்பதை நீதிமன்றம் நம்புவதாக நீதிபதி குறிப்பிட்டார். ஆனால், அந்தப் பதிவேட்டை சாட்சி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறினார்.

இந்த ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்திருந்த மூன்று பெண்களில் ஒருவர் அனந்தி சசிதரன் ஆவார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளி ஒருவராக இருந்து வந்த தனது கணவரான எழிலனை (சசிதரன்) அன்றைய தினம் அவர் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைய வேண்டுமென அனுப்பி வைத்திருந்தார். பின்னர் அவருடைய கணவர் காணாமற் போயிருந்தார். தன்னுடைய கணவர் மீண்டும் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையிலேயே சரணடையுமாறு அவர் கணவரிடம் கூறியிருந்தார். கணவர் அவ்விதம் திரும்பி வராத பொழுது அனந்தி அவரைத் தேடத் தொடங்கியதுடன், அதனைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். அனந்தி தனது விடயத்தை ஜெனீவாவில் ஐ.நா. மன்றத்துக்கு எடுத்துச் சென்றதுடன், போர்க் குற்றங்களுக்கு வகைப் பொறுப்புக் கூற வேண்டிய ஓர் அரங்கு என்ற முறையில் நாடாளுமன்றத்திற்குள் பிரேவேசிப்பதற்கு அவர் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது.

நீதிமன்றத் தீர்ப்பின் முக்கியத்துவம் குறித்த கேள்விகளுக்கு அனந்தி பதிலளித்ததுடன், நீதிக்கான தனது போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் எனக் குறிப்பிட்டார்.

கே: உங்கள் கணவரை ஆஜர்படுத்துமாறு இராணுவத்தைக் கோரும் நீதிமன்ற தீர்ப்பு எவ்வளவு முக்கியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: 18.05.2009 இல் இலட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்த இடத்தில் இலங்கை இராணுவத்திடம் நிராயுதபாணியாக கையளித்திருந்தேன். **ICRC, HRC** மற்றும் புனர்வாழ்வு அமைச்சர்கள், ஜனாதிபதி, பிரதமர் என்று சகலரிடமும் முறையிட்டேன். 2009 இலேயே ஐ.நா. மன்றத்திடமும் முறையிட்டிருந்தேன். ஒரு பதிலும் இல்லை. 2013 இல் ஆட்கொணர்வு மனு வழக்கு வவுனியா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. சரணடைந்த சம்பவம் முல்லைத்தீவு எல்லைக்குள் நடந்தபடியால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தாலும், இராணுவ புலனாய்வாளர்களாலும் பல அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டேன். நீதிமன்றத்திற்குச் செல்லும் வழியில் புலனாய்வாளர்கள் எனது வாகனத்தை பின் தொடர்வதும், அச்சுறுத்துகின்ற வகையில் கண்காணிப்பதும், எனக்கு எதிராக சிஎஸ்டி பண்ணையில் வேலை செய்கின்ற முன்னாள் போராளிகள், போராளிகளின் மனைவிமாரை கொண்டு போராட்டம் செய்வது, அவர்களைக் கொண்டு எனக்கு எதிராக கோசங்களை எழுப்புவது எல்லாமே நடந்தது. ஆனாலும் வழக்குகளுக்குத் தொடர்ந்து சென்று வந்தேன்.

வவுனியா உயர் நீதிமன்றில் எனது ஆட்கொணர்வு மனு வழக்கிற்கான தீர்ப்பு வந்துள்ளது என்பது ஒரு நம்பிக்கையையும் தெம்பையும் தந்திருக்கிறது. அறம் வெல்லும் என்ற நம்பிக்கை துளிர்விட்டிருக்கிறது.

**கே:** அது உங்களை எப்படி உணர வைத்தது?

**ப:** நான் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், அவமானங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு தீர்வு கிடைச்சிருக்கு. மனக்காயம் கொஞ்சம் ஆறியமாதிரி இருக்கிறது.. அறம் வெல்லும் என்ற நம்பிக்கை துளிர் விட்டிருக்கு. இன்னும் நம்பிக்கையுடன், வலுவாக அறம் சார்ந்து போராடக்கூடிய மன எழுச்சி ஏற்பட்டிருக்கு.

**கே:** இந்தத் தீர்ப்பைப் பெறுவதற்கு நீங்கள் மேற்கொண்ட செயல்முறை என்ன?

**ப:** 18.05.2009 இல் என் கணவரை சரணடையக் கொடுத்துவிட்டு, அரச உத்தியோகத்தருக்கான சொற்ப சம்பளத்தில் பிள்ளைகளை வளர்க்க, கல்வியை ஊட்ட, பாதுகாப்பாக வைத்திருக்க என்று பலவகையில் பொருளாதார ரீதியாகவும் உளரீதியாகவும் போராட வேண்டியவளாக இருந்தேன். இலங்கை இராணுவத்தின் விசாரணை, இலங்கை புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் எல்லாமே இருந்தது. முதன் முதலாக 2011இல் எனது மூன்று பிள்ளைகளையும் கொழும்பிற்கு பஸ்ஸில் கூட்டிக்கொண்டு சட்டத்தரணி ரத்னவேல் அவர்களைச் சந்தித்து எனது கணவரை சரணடைய கொடுத்த சம்பவத்தை விசாரித்து ஆட்கொணர்வு மனு வழக்கு தாக்கல் செய்து தருமாறு கோரியிருந்தேன்.

ரத்னவேல் சேர் சொன்னார் இவ்வழக்கு மிகவும் அச்சுறுத்தலானது, நீங்கள் தனியாக இதில் ஈடுபடுவதை விட இன்னும் சிலரை சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்யலாம் என்றார். இந்த வழக்கிற்கான பணம் எதுவும் தரத் தேவையில்லை எனவும் சொன்னார். எனவே, 2011 இல் கிளிநொச்சியில் எனது அலுவலக கடமை நேரம் முடிந்தபின் பஸ்ஸில் சென்று பல போராளிகளின் மனைவியார், தாய்மார்களைச் சந்தித்தேன். அதேபோல் யாழ்ப்பாணத்தில் சனி, ஞாயிறு நாட்களில் பஸ்ஸில் சென்று போராளிகளின் மனைவியாரைச் சந்தித்தேன். சுமார் 25 பேர் வரை சந்தித்தேன். இதில் நான்கு பேர் என்னுடன் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்ய உடன்பட்டனர்.

பின்னர் இந்த நான்கு பேரையும் கொழும்பிற்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களை பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்து ரத்னவேல் சேருடன் கடமையாற்றிய சட்டத்தரணி மங்களேஸ்வரி அவர்களின் உதவியுடன் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அந்த நெருக்கடியான காலப்பகுதியில் **CHRD** யில் கடமையாற்றிய பலர் எங்களுக்கு அன்பாகவும் ஆதரவாகவும் இருந்தனர். குறிப்பாக சட்டத்தரணி மங்களேஸ்வரி மிகவும் துணிச்சலாக பக்கபலமாக இருந்தார்.

அடுத்த கட்டமாக ஐந்து பேரை இணைத்து வழக்கு தாக்கல் செய்தோம். இதில் பல சரணடைந்தவர்களின் மனைவியர் இதே வழக்கினை தாக்கல்

(09ஆம் பக்கம் பார்க்க)

# உக்ரைனில் ஜப்பான் பிரதமர்; ரஷ்யாவில் சீன அதிபர்!

## எதிரெதிர் பயணங்களுக்கு காரணம் என்ன?



உக்ரேன் போர் ஆசியாவில் எப்படி எதிரொலிக்கிறது என்பதை நீங்கள் அறிய விரும்பினால், ஜப்பான் மற்றும் சீன தலைவர்களின் பயணம் உங்களுக்கு ஒரு சிறந்த உதாரணத்தை வழங்கக்கூடும். போரில் எதிரெதிர் பக்கங்களில் உள்ள நாடுகளுக்கான பயணத்தில் இந்த நாடுகளின் தலைவர்கள் உள்ளனர்.

உக்ரேன் தலைநகர் கியவ் சென்றுள்ள ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா புனரமைப்பு, மனிதாபிமான உதவிகள் தொடர்பாக உக்ரேன் அதிபருக்கு உறுதியான ஆதரவை தெரிவித்துள்ளார்.

மறுபுறம், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் நண்பர் என்றும் கூட்டாளி என்றும் கருதப்படும் சீன அதிபர் ஷி ஜின்பின் தற்போது மாஸ்கோவில் உள்ளார். தன்னை நடுநிலையாளர் என்று சீனா கூறிகொண்டாலும், ரஷ்யா சார்புடையதாகவே அந்நாடு தெரிகிறது.

ரஷ்யாவுடனான தனது உறவுகளுக்கு சீனா முன்னுரிமை அளிக்கும் என்று செவ்வாயன்று கூறிய ஷி ஜின்பிங், இரு நாடுகளையும் சக்திவாய்ந்த அண்டை நாடுகள் என்றும் விவரித்தார்.

சூழல், நேரம் ஆகியவற்றின் அடிப்படையில், ஜப்பான் பிரதமர் கிஷிடாவின் உக்ரேன் பயணமும் குறிப்பிடத்தக்கது ஆகும். இதில் நாம் என்ன புரிந்துகொள்ள முடியும்?

ஜப்பானிய தலைவர் ஒருவர் அறிவிக்கப்படாத வெளிநாட்டு பயணம் மேற்கொள்வது என்பது அரிதானது. அதிலும், இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் போரில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டுக்கு செல்லும் முதல் ஜப்பானிய பிரதமர் கிஷிடா தான். செவ்வாயன்று அவர் புறப்படுவதற்கு முன்புவரை அவரது பயணம் குறித்த தகவல் ரகசியமாகவே வைக்கப்பட்டது. பாதுகாப்பு காரணங்களுக்காக அவரது பயணத் தகவல் ரகசியமாக வைக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த பயணத்தின் போது, அருகில் உள்ள புச்சா நகருக்கு கிஷிடா அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு கடந்த ஆண்டு ரஷ்யப் படைகளால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அங்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அவர், அப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியத்தின் மீது மிகுந்த கோபம் கொள்வதாகக் கூறி ஆறுதல் கூறினார்.

இந்த பயணத்திற்கு முன்னதாக, ஜப்பானிய வெளியுறவு அமைச்சகம், 'தங்கள் தாய்நாட்டைக் காக்க எழுந்து நிற்கும் உக்ரேனிய மக்களின் தைரியம், பொறுமைக்கு மதிப்பளிப்பதாகவும் அசைக்க முடியாத ஆதரவை வழங்குவதாகவும்" கூறியது.

'படையெடுப்பு, வலுகட்டாயமாக ரஷ்யா மேற்கொண்டுள்ள ஒருதலைப் பட்சமான மாற்றத்தை கிஷிடா முற்றிலும் நிராகரிப்பார்" என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உக்ரேனுக்கு கிஷிடா பயணம் செல்ல வேண்டும் என்று அவரது சொந்த கட்சியான ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சியில் இருந்து அழுத்தம் வந்தது. உக்ரேன் மீது ரஷ்யா படையெடுப்பை தொடங்கிய பின், அங்கு பல்வேறு நாட்டு தலைவர்களும் சென்றனர். அங்கு செல்லாத ஒரே ஜி7 நாட்டு தலைவராக கிஷிடா இருந்தார். எனவே, ஹிரோஷிமாவில் மே மாதம் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்குவதற்கு முன்பாக அவர் உக்ரேன் செல்ல வேண்டும் என்று குரல்கள் எழுந்தன.

கடந்த வாரம் டோக்கியோவில் தென் கொரிய அதிபருடன் ஒரு உச்சி மாநாட்டை நடத்தியதன் மூலம் ஏற்கனவே அவர் ஒரு ராஜதந்திர நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். தென் கொரியா- ஜப்பான் இடையேயான இந்த பேச்சுவார்த்தை பல ஆண்டுகளுக்கு பின் நடைபெற்றுள்ளது .



தென் கொரியாவுடன் உறவுகளை இயல்பாக்குவது, உளவுத்துறையைப் பகிர்வது மற்றும் வட கொரியாவுக்கு எதிராக ஒன்றிணைந்த கூட்டணியை காட்டுவது போன்றவை ஜப்பானின் நட்பு தொடர்பாக அமெரிக்காவுக்கு உறுதியளிக்கும்.

ஜப்பான் பிரதமரின் உக்ரேன் பயணம் வாஷிங்டனால் வரவேற்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. சீனத் தலைவரின் மாஸ்கோ பயணத்தின் ஒரு பகுதி, நாட்டின் உலகளாவிய செல்வாக்கை விரிவுபடுத்தும் முயற்சியாகும். அதே நேரத்தில் உக்ரைனில் ஜப்பான் தலைவர் இருப்பது, இந்த புவிசார் அரசியல் கொந்தளிப்புக்குள் அவர்கள் எங்கு நிற்கிறார்கள் என்பதற்கு வலுவான செய்தியை அனுப்புகிறது.

இது சாதாரண சாதனையல்ல. குறிப்பாக சீனாவுடனான அதன் உறவில் ஜப்பானுக்கு நிறைய சமநிலை உள்ளது. கடந்த மாதம், டோக்கியோவில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக இரு நாடுகளும் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை நடத்தியது. ஜப்பானின் ராணுவக் கட்டமைப்பினால் கவலையடைந்துள்ளதாக சீனா கூறியது. ரஷ்யாவுடனான சீனாவின் ராணுவ உறவு, உளவு பலூன்களை பயன்படுத்துவது ஆகியவற்றை ஜப்பானும் விமர்சித்தது.

உலகின் இரண்டாவது, மூன்றாவது பெரிய பொருளாதார நாடுகளாக சீனா, ஜப்பான் உள்ளன. அவர்களுக்கு மத்தியில் உள்ள தற்போதைய பதற்றங்களுக்கு இடையே ஒரு திறந்த தொடர்பு ஒட்டம் அவசியம்.

உக்ரேனில் நடைபெறும் போர் தொடர்பாக ஜப்பானுக்கும் அதன் சொந்த கவலைகள் உள்ளன. உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கும் தாய்வானுக்கு எதிரான சீனாவின் ராணுவ ஆக்கிரமிப்புக்கும் இடையேயான சாத்தியமான ஒற்றுமை குறித்த ஆழ்ந்த கவலை ஜப்பானுக்கு உள்ளது. •

# காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள்.....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கு உடன்படவில்லை.தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்படும் என்றும், அரசு தங்களை பழி வாங்கும், பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்றும் மறுத்துவிட்டனர்.

**கே:** இந்தத் தீர்ப்பால் என்ன நடக்கும் என்று நம்புகிறீர்கள்?

**ப:** இந்தத் தீர்ப்பு காணாமற்போனவர்களுக்காக போராடும் ஏனையோருக்கு முன்னுதாரணம்.
ஆயிரக்கணக்கானவர்கள் சரணடைந்தார்கள். எனவே, ஏனையவர்களும் வழக்குகளை தாக்கல் செய்ய முன்வர வேண்டும். இனி பாதுகாப்பு தரப்பிலிருந்து என்ன வெளிப்பாடு வரப்போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

**கே:** நீங்கள் ஜெனிவா சென்ற போது சர்வதேச சமூகம் உங்களுக்கு உதவியாக இருந்ததா?

**ப:** ஜெனிவா சென்றபோது அங்குள்ள தமிழ் அமைப்புக்கள் எங்களுக்கு எதுவுமே செய்துவிடவில்லை. ஆனாலும், நீதி கோருகின்ற பொது வேலைத்திட்டத்திற்கு 2014 இலிருந்து இன்றுவரை முன்னெடுத்து வருகிறேன். 2014 - 2015 களில் சர்வதேசம் எங்கள் கருத்துக்களை செவிமடுத்தது. குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானிய, சுவிஸ் போன்ற நாடுகள் போரில் சாட்சியாக என் குரலை செவிமடுத்தது. ஆனால், சர்வதேசம் உருவாக்கிய நல்லாட்சிக்கு பின் சாத்தியமான எதுவும் நடக்கவில்லை. சர்வதேச விசாரணை என்பதை வலியுறுத்தினோம். 30-1 தீர்மானம் கலப்பு பொறிமுறை என்றது. பின்னர் வலுவிழந்த தீர்மானங்கள் நீர்த்துப் போனதாக இருக்கின்றது.

2013 - 2015 களில் நாடுகளும் சரி, சர்வதேச நிறுவனங்களும் சரி எங்களுக்கான நீதியை பெற்றுத்தருவதில் கரிசனைக் காட்டியது. இதன் காரணமாக போர் சாட்சியாக என்னையும் முன்னிலைப்படுத்தியது. இலங்கையில் ஏற்பட்ட 2015 ஆட்சி மாற்றத்தின் பின் எல்லாமே மாறிவிட்டது. ஆனாலும், தொடர்ந்து எனது நீதிகோரிய பயணம் தொடர்கின்றது.

**கே:** மனித உரிமைகள் பேரவையில் எத்தனை முறை உரையாற்றினீர்கள்?

**ப:** நான் 2014 தொடக்கம் இன்றுவரை 15 தடவைக்கு மேல் ஐ.நா. சபையில் பேசியுள்ளேன்

**கே:** முடிவு என்னவாக இருக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்?

**ப:** நல்ல முடிவுக்காக இன்றும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இன்றும் போராட வேண்டிய தேவை உள்ளது. உலக நாடுகள் தங்கள் நலன் சார்ந்து சிந்திக்கின்றனவே தவிர மனித நேயம் காக்கப்படுவதில்லை. மனித உரிமை என்பது வலுவிழந்தவர்களை கையாள எடுத்துக்கொள்ளும் கருவியாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. 13 வருடங்கள் கடந்தும் இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும், தடை செய்யப்பட்ட நச்சு குண்டுகள், கொத்து குண்டுகள் கொண்டும் கொள்ளப்பட்டும் தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கண்டுகொள்ளத் தவறிய ஐக்கிய நாடுகள் சபையை என்னவென்று சொல்வது?

**கே:** இறுதியில் உங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்னும் உள்ளதா?

**ப:** காலம் கடந்தாலும் நீதியைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இலட்சக்கணக்கான மக்களின் ஆன்மாக்கள், இனவிடுதலைக்காக தங்கள் உன்னதமான உயிரை ஆகுதியாக்கிய ஆயிரக்கணக்கான மாவீரர்களின் தியாயங்கள் வீண்போகாது. நீதியை பெற்றுக்கொள்ள போராடுவோம். அறம் வெல்லும்.

(Groundviews தளத்தில் வெளியான நேர்க்காணலின் தமிழாக்கம்) •

# வெளிநாட்டு தூதுவர்கள் மூலம் எதிர்க்கட்சிகள் சதி நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 25

பிரச்னைகளற்ற நாடாக இலங்கை கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு தூதுவர்கள் ஊடாக அதனை முறியடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதித் திட்டம் தீட்டுகின்றன. நாட்டை நேசிப்பதாகக் கூறுபவர்களாலேயே இவ்வாறான மோசமான நடவடிக்கைகள் முன்னெடுப்படுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஐ. தே. க. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த நாடாகக் காணப்பட்ட இலங்கையை மீண்டும் உயிர்ப்பித்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். இந்த சவாலை ஏற்பதற்கு அனைவரும் அஞ்சி ஓடிய போது , தனியொரு நபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராடி வெற்றி பெற்றுள்ளார்.

ஐ.தே.க. பொது செயலாளராக தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்கு கையெழுத்திடுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றமையை பாக்கியமாகக் கருதுகின்றேன். அவரால் நாட்டு மக்களுக்கு நிம்மதியாக சுவாசிக்கக் கூடிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவு பொருட்கள் , உரம் உள்ளிட்டவற்றின் விலைகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரச்சினைகள் அற்ற நாட்டை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் போது எதிர்க்கட்சிகள் வெளிநாட்டு தூதுவர்களை அவசரமாக சந்தித்து அந்த முயற்சிகளை முறியடிப்பதற்கு சதித்திட்டம் தீட்டுகி றன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை காலம் தாழ்த்துமாறும், மேலும் கடுமையான நிபந்தனைகளை முன்வைக்க வலியுறுத்துமாறும் தூதுவர்களிடம் கோரியுள்ளன. நாட்டை நேசிப்பதாகக் கூறுபவர்களே இவ்வாறு செயல்படுகின்றனர் - என்றார். (ஐ)

# கொழும்பில் இன்று தண்ணீர் வெட்டு!

கொழும்பு, மார்ச் 25

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் இன்று சனிக்கிழமை 10 மணித்தியால நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இன்று காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் அத்தியாவசிய பராமரிப்பு பணிகளுக்காக அம்பத்தலே நீர் விநியோக நிலையத்துக்கான மின்சார விநியோகம் இடைநிறுத்தப்பட வுள்ளமையின் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு, தெகிவளை, கல்கிசை, கோட்டை மற்றும் கடுவலை மாநகர சபைகளுக்கு உட்பட்ட பகுதிகள், மஹரகம, பொரலஸ்கமுவ மற்றும் கொலன்னாவ நகர சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நீர் விநியோகம் இடைநிறுத்தப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கொட்டிகாவத்தை - முல்லேரியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகள், இரத்மலானை மற்றும் கட்டுபெத்தை பிரதேசங்களிலும் நீர் விநியோகம் இடைநிறுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது. (ஐ)

# தெற்காசியாவிலேயே சிறந்த ஊழல் எதிர்ப்பு சட்டம் வரும்!



கொழும்பு, மார்ச் 25

தெற்காசியாவிலேயே சிறந்த ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார்.

இந்த சட்டமூலத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் எதிர்க்கட்சி பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி பாராளுமன்றத்தில் சமர்பிப்பேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)

# பேருந்து மோதியதில் பெண் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, மார்ச் 25

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் சத்துருக்கொண்டான் பகுதியில் பேருந்து மோதியதில் பெண் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

பேருந்தின் சாரதியை தாம் கைது செய்துள்ளனர் என்றும் உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை எனவும் கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தனியார் சொகுசு பேருந்து சம்பவ தினமான நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து பயணித்த போது கொழும்பு வீதியின் சத்துருக்கொண்டான் பகுதியில் பெண் ஒருவர் மீது மோதியதை அடுத்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

**கல்வி tv CHANNEL-1**

**25.03.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**25.03.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# கல்முனை வலயத்தின் கணக்காய்வுக் கூட்டம்

அம்பாறை, மார்ச் 25

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் ஏ.எம்.எம்.றபீக் கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் கணக்காய்வு கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கல்முனை கல்வி வலயத்திற்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் கடந்த புதன் கிழமை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக் கல்வி அலுவலகப் பணிமனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தை கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் அல்ஹாஜ்.வை.ஹபீபுள்ளா நெறிப்படுத்தினார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், மற்றும் கல்முனைக் கல்வி வலய அதிபர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

(அ)

# ஆளும் அதிகார சக்திகளின் ஆடுகளமாகவுள்ள சபைகள்

## சிறிநேசன் எச்சரிக்கை



**நிந்தவூர், மார்ச் 25**

**கலைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் ஆளும் அதிகார சக்திகளின் ஆடுகளமாக மாறப்போகும் நிலை ஏற்படும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.சிறிநேசன் எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் - தற்போதைய நிலையில் ஜனாதிபதியும் ஆளும் கட்சியினரும் எந்தவோர் தேர்தலையும் விரும்பவில்லை. இதற்கான மூலகாரணம் தேர்தலில் ஆளும் கட்சியினர் படுதோல்வி அடைவார்கள் என்ற அச்சமே ஆகும்.

இந்த நிலையில், உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்டமையால், 340 உள்ளூராட்சிச் சபைகளும் ஆளுநர்களின் அதிகாரப் பிடிக்குள் வந்துள்ளன.

ஏற்கனவே 9 மாகாண சபைகளும் ஆளுநர்களின் முழுமையான அதிகாரப்பிடிக்குள் வந்து 5 வருடங்களாக அடங்கிக் கிடக்கின்றன. ஆயின் நாட்டில் தேர்தல்கள் இல்லாத, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சபைகளாக உள்ளூராட்சிச் சபைகள், மாகாண சபைகள் ஆக்கப்பட்டுள்ளன.

எனவே ஆளுநர்கள் தமது அதிகாரங்களைக் கொண்டு ஜனாதிபதிக்கும், பொதுஜன பெரமுன கட்சிக்கும் மிகவும் விசுவாசமான அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. இவர்கள் உள்ளூராட்சிச் சபைகளின் ஆணையாளர்களாக, செயலாளர்களாக இருந்து பணியாற்றப் போகின்றார்கள். குறிப்பாக கிழக்கு மாகாண ஆளுநர் மாகாண சபையில் திருப்தியீனமாக நடந்துகொள்வது போல், உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரிகள் நியமனத்திலும் நடந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, தேர்தல் இல்லாத நிலையில் மாகாண சபைகளைப் போல், உள்ளூராட்சிச் சபைகளும் ஆளும் கட்சியின் அதிகார ஆடுகளமாக மாறப்போகின்றது. -என்றார்.

(அ-06)

# பெண்களை வலுப்படுத்தும் பெரும் வர்த்தகக் கண்காட்சி



திருமலை, மார்ச் 25

பெண்களை வலுப்படுத்துவதற்காக வர்த்தகக் கண்காட்சி மற்றும் புத்தாக்க நிகழ்வுகள் திருகோணமலை மாவட்ட செயலாளர் வி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நேற்று முன் தினம் மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகம், திருகோணமலை மாவட்ட செயலகம், ஜி.ரி. இசட் நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த "அவள் தேசத்தின் பெருமைக்குறியவள்" எனும் தொனிப்பொருளிலான சர்வதேச மகளிர் தினம் - 2023 மாவட்ட நிகழ்வுக்கு இணைவாக நடத்தப்பட்ட இந் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹமத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

அங்கு அமைக்கப்பட்ட 68 விற்பனைக் கூடாரங்களில் விஷேட வேலைத்திட்டங்களாக டிஜிற்றல் வலயம், ஐ.சி.ரி தொழில் வங்கி மற்றும் தொழில் வழிகாட்டுதல்கள், ஐ.சி.ரி பாடநெறிகள் மற்றும் டிஜிற்றல் வங்கிச் சேவைகள், இலத்திரனியல் விளையாட்டுக்கள், கண்காட்சிக் கூடாரங்கள், சுயதொழில் உற்பத்திப்பொருட்கள் போன்றன அமையப்பெற்றதுடன் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் வளர்ந்தோர்களுக்கான விசேட வேலைத்திட்டங்கள், ஐ.சி.ரி துறையில் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பு தொடர்பாக பெற்றோரை தெளிவூட்டல், ஐ.சி.ரி துறையின் புதிய பரிணாமம் மற்றும் அதற்குரிய பாடநெறிகள், பிள்ளைகளின் நிகழ்நிலை, சமூக ஊடகங்கள் வாயிலாக இடைஞ் சல்களுக்கு உட்பட்டவர்களுக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், பாதுகாப்பான முறையில் இணையத்தளத்தை கையாளுதல் மற்றும் சைபர் குற்றங்கள் தொடர்பில் அறிவூட்டல் போன்ற கூடாரங்களும் அமைக் கப்பட்டிருந்தன.

இதில் மத்திய மாகாணத்தை சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்களும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களும் பங்கு கொண்டனர்.

# மாலை கல்வி நிலையம் பாலக்குடாவில் ஆரம்பம்!



அம்பாறை, மார்ச் 25

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய விநாயகபுரம் பாலக்குடா மாணவர்களுக்கு இலவசமாக மாலை நேர வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"ஜேர்மன் உதவும் இதயங்கள்" எனும் அமைப்பு இந்த மாலை நேர வகுப்பை நேற்று முன் தினம் ஆரம்பித்து வைத்தது.

ஜேர்மனில் இருந்து வருகை தந்த ஜேர்மனிய உதவும் இதயங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.ஸ்ரீரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதியசேகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கல்வி நிலையத்தைத் திறந்து வைத்தார். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

10 லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்வி நிலையத்தை திறந்து வைத்த உதவிப் பிரதேச செயலாளர் சதியசேகரன் மாணவர்களுடன் கலந்துரையாடினார். அதன் பின்பு கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

ஜேர்மன் உதவும் இதயங்கள் அமைப்பு வடக்கு-கிழக்கில் இப்படியாக 11 இடங்களில் மாலை நேர இலவச வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

(அ)

# தென் எருவில்பற்று பிரதேச சிறுவர் அபிவிருத்தி கூட்டம்



அம்பாறை, மார்ச் 25

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவின் முதலாம் காலாண்டுக்கான பிரதேச சிறுவர் அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிறுவர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்னைகள் தொடர்பில் கருத்துக்கள் பகிரப்பட்டதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன.

குறிப்பாக சிறுவர் இடைவிலகலை குறைத்தல், சிறுவர் பாதுகாப்பு மிகுந்த நிலையான குடும்பச்சூழலை உருவாக்குதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் தராதரங்களை கண்காணித்தல், பல்துறை சார்ந்த ஒருங்கிணைப்புக்களை பலப்படுத்தல், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சட்டரீதியான பாதுகாப்பை பெற்றுக் கொடுத்தல் என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (அ)

## சிறை தண்டனையின் எதிரொலி:

# எம்.பி.பதவியை இழந்தார் ராகுல்!

புதுடில்லி, மார்ச் 25

**பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.**

**பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத்தின் சூரத் நீதி மன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியது.**



இதையடுத்து, குற்றவியல் வழக்கில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் தண்டனை பெறுபவர்கள் மக்கள் பிரதிநிதியாக தொடர முடியாது எனும் சட்டத்தின் கீழ், ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலின் போது, கர்நாடகாவின் கோலார் பகுதியில் 2019 ஏப்ரல் 13ஆம் திகதி நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, "ஏன் அனைத்து திருடர்களும் மோடி என்ற குடும்பப் பெயரையே கொண்டுள்ளனர். நீரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி என்று எல்லா திருடர்களின் பெயர்களும் மோடி என்றே முடிவது ஏன்?" என்று விமர்சித்திருந்தார்.

இது தொடர்பாக குஜராத்தை சேர்ந்த பா.ஜ.க எம்.எல்.ஏ. புர்னேஷ் மோடி, சூரத் தலைமை நீதித்துறை நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார்.

இந்திய குற்றவியல் சட்டம் 499, 500 ஆகிய பிரிவுகளின் கீழ் ராகுல் காந்தி மீது விசாரணை நடைபெற்றது. 2021 ஜூன் மாதம் ராகுல் காந்தி நீதிமன்றத்தில் ஆஜராகி, விளக்கம் அளித்தார். சுமார் 4 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கில் கடந்த 17ஆம் திகதி இருதரப்பு வாதங்கள் நிறைவடைந்து, தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. மார்ச் 23ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிவான் எச்.எச். வர்மா அறிவித்திருந்தார்.

இதையடுத்து, ராகுல் காந்தி உள்ளிட்டோர் சூரத் தலைமை நீதித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் ஆஜராகினர். அனைத்துத் தரப்பினரும் ஆஜரான நிலையில் தீர்ப்பை வாசித்த நீதிவான் வர்மா, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றவாளி என்று தீர்ப்பளித்தார். தொடர்ந்து மனுதாரர் புர்னேஷ் மோடி தரப்பு வழக்கறிஞர் கூறும்போது, "சட்டங்களை இயற்றும் மக்களவையின் எம்.பியாக ராகுல் காந்தி உள்ளார். அவருக்கு சட்ட விதிகள் அனைத்தும் தெரியும். அவரே விதிகளை மீறியுள்ளார். அவருக்கு அதிக பட்ச தண்டனை வழங்கவேண்டும். இந்த தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்" என்றார்.

ராகுல் காந்தி தரப்பு வழக்கறிஞர்கள் வாதாடும் போது, "வழக்கில் மன்னிப்பு கோர விரும்பவில்லை. ராகுல் காந்தி ஊழலுக்கு எதிராகவே பேசினார். அவர் தனது கடமையை மட்டுமே செய்தார்" என்றனர்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட மாஜிஸ்திரேட் வர்மா, ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.15,000 அபராதமும் விதித்தார். இதையடுத்து, ராகுல் காந்தி தரப்பில் பிணை கோரப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிவான் வர்மா, அவருக்கு 30 நாள் பிணை வழங்கி, அதுவரை தண்டனையை நிறுத்திவைக்க உத்தரவிட்டார்.

## பிரான்ஸ் அரசுக்கு எதிர்ப்பு நீடிக்கும்!

# வரும் செவ்வாயன்று அடுத்த கட்ட வேலைநிறுத்தம்; மாபெரும் பேரணிகளால் முழுநாடும் அதிர்கின்றது




பாரிஸ், மார்ச் 25

பிரான்ஸில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வீதிப் பேரணிகள் காரணமாக நாட்டில் இயல்பு நிலை பெரிதும் குழப்பமுற்றுள்ளது. எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகங்கள் சீர்குலையும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது

அரசுத் தலைவர் மக்ரோன் ஓய்வூதியச் சட்டம் தொடர்பாக வழங்கிய தொலைக்காட்சி நேர்காணலுக்குப் பின்னர் எதிர்ப்பாளர்களது பிரதான இலக்காக மாறியிருக்கிறார்.

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற போராட்டங்களில் ஆத்திர உணர்வும் வன்முறைப் போக்கும் மேலோங்கிக் காணப்பட்டது.

ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்ட பொலீஸ் மற்றும் ஜொந்தார்ம் படையினர் 149 பேர் காயமடைந்தனர் என்றும் வன்முறையில் ஈடுபட்ட 172 பேர் நாடெங்கும் கைது செய்யப்பட்டனர் எனவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அதேசமயம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலீஸ் வன்முறைகள் இடம்பெறுவதாக வெளியான செய்திகளை அடுத்து "தேவையற்ற பலப்பிரயோகத்தை மேற்கொள்ள வேண்டாம்" என்று சர்வதேச மன்னிப்புச் சபை அரசு அதிகாரிகளைக் கேட்டிருக்கிறது.

தென்மேற்கு நகரமான போர்தோவில் நேற்று முன் தினம் இரவு நகர மண்டபத்தின் முன்பாகக் கலகம் அடக்கும் படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு கட்டத்தில் நகரசபை மண்டபத்தின் நுழைவாயில் கதவுக்குத் தீ மூட்டப்பட்டது.

புகழ்பெற்ற மண்டப வாயில் தீப்பற்றி எரிகின்ற காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகின. தீயணைப்புப் படையினர் விரைந்து தீயை அணைத்துவிட்டனர்.

மக்ரோன் அரசு அரசமைப்பின் 49.3 பிரிவைப் பயன்படுத்தி ஓய்வூதியத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்ற வழிமுறைகளை மீறி நிறைவேற்றியதால் ஆத்திரமடைந்த மக்கள் தங்களது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக மாபெரும் பேரணிகளில் அணி திரண்டு பங்கேற்றுவருகின்றனர். இன்னொரு புறத்தில் பொலீஸார் மற்றும் பொதுச் சொத்துகள் மீதான வன்முறையும் தீவிரமடைகின்றது.


நாடெங்கும் உருவாகியுள்ள அமைதியின்மையை அடுத்து அரசுத் தலைவர் மக்ரோன் அது தொடர்பாகத் தொலைக்காட்சிக்கு அளித்த விசேட செவ்வியில், மக்களது நியாயமான கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல், ஓய்வூதியச் சட்டத்தின் அவசியம் பற்றியும் அதிலிருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை என்றவாறும் கருத்துக்களை அள்ளி வீசி எறிந்து "எரியும் நெருப்பில் எண்ணெய்" ஊற்றியுள்ளார் என்று கண்டனங்கள் எழுந்துள்ளன. அதன் எதிரொலியாக நேற்றைய பேரணிகளில் ஓய்வூதியத் திருத்தச் சட்டத்தை விடவும் மக்ரோன் எதிர்ப்புக் கோஷங்களே அதிகம் ஒலித்தன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை நாடெங்கும் இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களில் நடந்த பேரணிகளில் சுமார் 35 லட்சம் பேர் திரண்டனர் என்று தொழிற்சங்கங்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மார்ச் 7 ஆம் திகதி நடந்த பேரணி போன்று இந்த எண்ணிக்கை மிக உச்ச அளவு என்று தொழிற்சங்கத் தலைவர்கள் வியந்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசுத் தரப்பில் உள்துறை அமைச்சு வெளியிட்ட புள்ளி விவரம் நேற்று முன் தினம் பேரணிகளில் நாடு முழுவதும் பத்து லட்சம் பேரே பங்குபற்றினர் என்று குறைத்து மதிப்பிட்டுள்ளது. பாரிஸில் நேற்று பேரணிகள் நடந்த இடங்களில் மிக அதிக எண்ணிக்கையானவர்கள் திரண்டிருந்தனர். சுமார் பத்து லட்சம் பேர் பாரிஸில் பங்கேற்றுள்ளனர் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை-அடுத்த பத்தாவது எதிர்ப்பு நாளாக எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையை-பிரிட்டிஷ் மன்னர் மூன்றாவது சார்ள்ஸ் பாரிஸிக்கு விஜயம் மேற்கொள்கின்ற தினத்தைத்-தொழிற்சங்கங்களது கூட்டமைப்பு அறிவித்திருக்கிறது. அன்றைய தினம் வீதிப் பேரணிகளும் வேலை நிறுத்தங்களும் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

# பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள மிகப் பழமை வாய்ந்த பைபிள்



கொழும்பு, மார்ச் 25

மிகவும் பழைமையானதும் முழுமைப்படுத்தப்பட்ட துமான ஹீப்புறு பைபிள் இஸ்ரேலின் டெல் அவீவ் நகரில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பைபிளானது ஏலத்தில் விடப்படுவதற்கு முன்னர் இவ்வாறு பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த பைபிள் சுமார் 1100 வருடங்களுக்கு முன்னர் ஈகிப்து அல்லது லெவன்ட்டில் உள்ள ஒரு எழுத்தாளரால் உருவாக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

சரியான உச்சரிப்பு, நிறுத்தற்குறிகள், உயிரெழுத்துகள் கொண்ட கையெழுத்துப் பிரதியின் எஞ்சியிருக்கும் புத்தகம் இதுவாகும்.

நியூயோர்க் நகரில் எதிர்வரும் மே மாதத்தில் பைபிள் ஏலத்தில் விடப்படவுள்ளது.

30 மில்லியன் அமெரிக்க டொலர் தொடக்கம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் வரை ஏலம் விடப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு விற்கப்பட்டால் ஏலமொன்றில் அதிக விலைக்கு விற்கப்பட்ட முதலாவது வரலாற்று நூலாக இது பதிவாகும் என கூறப்படுகின்றது.

(அ)




# இலங்கை - நியூசிலாந்து ஒருநாள் போட்டி இன்று

ஒக்லாந்து, மார்ச் 25

இலங்கை - நியூசிலாந்து இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒக்லாந்தில் இன்று சனிக்கிழமை தொடங்குகிறது.

இலங்கை அணி, நியூசிலாந்து சென்று கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இதில், இரு அணிகளிடையேயான டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இந்நிலையில், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இலங்கை அணி தசூன் சானக தலைமையிலும் நியூசிலாந்து அணி ரொம் லதாம் தலைமையிலும் களமிறங்குகின்றன.

டெஸ்ட் போட்டியில் அசத்திய நியூசிலாந்து அணி அந்த ஆதிக்கத்தை ஒருநாள் தொடரிலும் நீட்டிக்க முயற்சிக்கும். அதேநேரத்தில் டெஸ்ட் தோல்விக்கு பதிலடி கொடுக்க இலங்கை அணி எல்லா வகையிலும் போராடும். அதுமட்டுமின்றி, உலகக் கிண்ணத்தின் சுப்பர் லீக் சுற்றுக்கு இலங்கை நேரடியாக தகுதி பெற வேண்டுமானால் இந்தத் தொடரை முழுமையாகக் கைப்பற்ற வேண்டும். எனவே, இந்த போட்டி பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளம் இதுவரை 99 ஒருநாள் போட்டியில் நேருக்கு நேர் மோதி இருக்கின்றன. இதில் 49இல் நியூசிலாந்தும் 41இல் இலங்கையும் வென்றுள்ளன. ஓர் ஆட்டம் சமநிலையிலும் 8 போட்டிகள் முடிவு இல்லாமல் போனது.

# மியாமி ஓப்பன் ரென்னிஸ் ரடுகானு வெளியேறினார்!




மியாமி, மார்ச் 25

மியாமி ஓப்பனில் கனடா வீராங்கனை பியாங்கா முதல் சுற்றில் எம்மா ரடுகானுவை வெளியேற்றி 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான மியாமி ஓப்பன் தற்போது ஆரம்பமாகியுள்ளது.

முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள இந்தத் தொடரில்,

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்க ஓப்பன் முன்னாள் சம்பியன்களான பியான்கா (கனடா)- எம்மா ரடுகானு (இங்கிலாந்து) பலப்பரீட்சை நடத்தினார்கள்.

2 மணி 33 நிமிடம் நீடித்த பரபரப்பான இந்த ஆட்டத்தில் பியான்கா 6-3, 3-6, 6-2 என்ற செற் கணக் கில் எம்மா ரடுகானுவை வெளியேற்றி 2ஆவது சுற்றுக் குள் நுழைந்தார்.

மற்றப் போட்டிகளில் சோபியா கெனின் (அமெரிக்கா), லேலா பெர்னாண்டஸ் (கனடா), கரோலினா முசோவா (செக் குடியரசு), ஷெல்பி ரோஜர்ஸ் (அமெரிக்கா) ஆகியோர் தங்களின் முதல் தடையை வெற்றிகரமாக கடந்தனர்.

# ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் பெயர்ஸ்ரோ பங்கேற்கமாட்டார்!




ஹைதராபாத், மார்ச் 25

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் இங்கிலாந்து வீரர் ஜொன்னி பெயர்ஸ்ரோ விளையாட மாட்டார். 33 வயதான ஜொன்னி பெயர்ஸ்ரோ கடந்த ஆண்டு செப்ரெம்பரில் காயமடைந்தார். இதற்காக சத்திர சிகிச்சை செய்த அவர் பல்வேறு தொடர்களில் விளையாடவில்லை.

இந்நிலையில், எதிர்வரும் 31ஆம் திகதி தொடங்கும் ஐ. பி. எல். தொடரில் பங்கேற்பார் என்று கூறப்பட்டது. ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஜொன்னி பெயர்ஸ்ரோவுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்க மறுத்துள்ளது.

பெயர்ஸ்ரோ ஐ. பி. எல்லில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் இல்லாதது அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

## ஆசிய கிண்ணத் தொடர்:

# பாகிஸ்தானிலேயே போட்டிகள் இந்தியவுக்கானது வேறு நாட்டில்




டுபாய், மார்ச் 25

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்த வருடம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இதேசமயம், இந்தியாவுடனான போட்டிகளை வேறொரு நாட்டில் நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகின்றது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை பாகிஸ்தானில் நடத்துவதில் ஆரம்பத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் முரண்பாடு நிலவி வருகிறது. இந்த நிலையிலேயே இது விடயம் குறித்து பேசப்படுகின்றது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளை பாகிஸ்தானைவிட வேறு எந்த நாடு நடத்தும் என்பது இன்னும் முடிவாகவில்லை. ஆனால், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், இலங்கை ஆகிய நாடுகளில் ஒன்று இந்தியா சம்பந்தப்பட்ட 5 போட்டிகளை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்தும் இந்தப் போட்டிகளை நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் இரண்டு போட்டிகளில் சந்திக்கும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கவே செய்கிறது. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் ஒக்ரோபரில் ஆரம்பமாகவுள்ள நிலையில், 6 நாடுகள் பங்குபற்றும் ஆசிய கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி செப்ரெம்பரில் நடைபெறவுள்ளது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் 6 அணிகளும் லீக் சுற்றில் இரண்டு குழுக்களில் மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு குழுவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் சுப்பர் 4 சுற்றில் ஒன்றையொன்று எதிர்த்தாடும். சுப்பர் 4 சுற்று முடிவில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும்.

இதன் பிரகாரம் இந்தியாவும் பாகிஸ்தானும் 3 தடவைகள் ஒன்றையொன்று எதிர்த்தாடுவதற்கான வாய்ப்பு இருக்கவே செய்கிறது. இந் நிலையில் போட்டி அட்டவணையைத் தயாரிக்கவென ஒரு செயல்குழு நியமிக்கப்பட்டுள்ளது. பங்குபற்றும் நாடுகளுடன் அந்தக் குழுவினர் கலந்துரையாடி விமானப் போக்குவரத்து, ஒளி பரப்பும் அட்டவணைகள் ஆகியவற்றையும் ஏற்பாடு செய்வர்.

(ஐ)

# அயர்லாந்துடனான தொடரை கைப்பற்றியது பங்களாதேஷ்

டாக்கா, மார்ச் 25

அயர்லாந்துக்கு எதிரான போட்டியை 10 விக்கெட்களால் வெற்றி கொண்ட பங்களாதேஷ் அணி 2 -0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

அயர்லாந்து கிரிக்கெட் அணி, பங்களாதேஷில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் அயர்லாந்து - பங்களாதேஷ் அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி சைல்ஹெட்டில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, பங்களாதேஷ் வீரர்களின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 28.1 ஓவர்களில் 101 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக கர்டிஸ் கேம்பர் 36 ஓட்டங்களும் லார்கான் டக்கெர் 28 ஓட்டங்களும் சேர்த்தனர்.

மற்ற வீரர்கள் ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை. பங்களாதேஷ் தரப்பில் வேகப்பந்து வீச்சாளர்கள் ஹசன் மக்மூத் 5 விக்கெட்களும் தஸ்கின் அகமது 3 விக்கெட்களும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் அணி 13.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 102 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.




தொடக்க வீரர்களான அணித் தலைவர் தமீம் இக்பால் 41 ஓட்டங்களும் (41 பந்து, 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள்), லிட்டன் தாஸ் 50 ஓட்டங்களும் (38 பந்கள் 10 பௌண்ட்ரிகள்) எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இதன் மூலம் 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் தொடரை கைப்பற்றியது.

(ஐ)



# நாணய நிதியத்தின் உடன்படிக்கை பொருளாதாரத்தின் மறுசீரமைப்பு

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையானது பொருளாதாரத்தின் மறுசீரமைப்பு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சட்டப்படி அனுமதி தேவையில்லாதபோதிலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியையும் உதவியையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - நாட்டின் கடனில் மட்டுமின்றி இந்த ஒப்பந்தத்தை நாடு அமுல்படுத்துமா? இல்லையா? என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது. கடனைச் செலுத்தவேண்டுமாயின் வீட்டிலிருக்கும் ஒரு பொருளை விற்றேஆகவேண்டும்.

எல்லா பங்கங்களிலும் தவறுகள் உள்ளன. அவற்றை திருத்திக் கொண்டு இணைந்து உதவுங்கள். சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுத்துங்கள். பழைய விளையாட்டை விளையாட முடியாது. பல திட்டங்களை எதிர்த்தவர்கள் எம்மோடு இருக்கின்றனர் என்றால் நல்லதுதானே- என்றார்.

# முல்லைத்தீவு மருத்துவமனைக்கு புதிய ஒட்சிசன் நிரப்பு நிலையம்

## அவுஸ்திரேலியா ரூ.200 மில்லியன் நிதி உதவி

முல்லைத்தீவு, மார்ச் 25

**முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நோயாளர்களின் தேவைக்காக ஒட்சிசன் நிரப்பு நிலையம் இல்லாத நிலையில் வெளிமாவட்டங்களில் இருந்து ஒட்சிசன் பெற்றுக்கொண்டு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை கடந்த காலத்தில் தொடர்ந்து வந்தது.**

கடந்த காலத்தில் ஏற்பட்ட கோவிட் 19 தொற்று காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அமைந்த கோவிட் சிகிச்சை நிலையத்துக்கு தேவையான ஒட்சிசனை பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன.

வெளி மாவட்டங்களில் இருந்தே ஒட்சிசனைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் கொவிட்-19 பாதுகாப்பு அவசர மருத்துவ உதவித்திட்டத்தின் கீழ் யுனப்ஸ் நிறுவத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய அரசின் 200 மில்லியன் ரூபா செலவில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்ட ஒட்சிசன் ஆலை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு தேவையான ஒட்சிசனை அங்கேயே உற்பத்தி செய்யப்படுவதுடன் மேலதிகமாக வெளிமாவட்ட மருத்துவமனைகளுக்கும் ஒட்சிசனை வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.




இந்த நிலையில் அவுஸ்திரேலியாவின் இந்த திட்டம் தொடர்பில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அவுஸ்திரேலிய தூதவர் மற்றும் யுனப்ஸ் திட்டத்தின் இலங்கைக்கான தலைவர் மற்றும் மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் வைத்தியர் வாசுதேவா, மருத்துவமனை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆம் ஆண்டை முன்னிட்டு சைக்கிள் பவனி

யாழ்ப்பாணம், மார்ச் 25

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கல்லூரியின் 200ஆவது முன்னிட்டு விசேட சைக்கிள் பவனி ஒன்று நேற்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை 7:00 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி உயர்பட்டபடிப்புக்கள் பிரிவில் கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

மத வழிபாடுகளோடு ஆரம்பமான நிகழ்வில் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 200 மரக்கன்றுகளை நாட்டும் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக மூன்று மரக்கன்றுகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் பட்டபடிப்புக்கள் வளாகத்தில் நாட்டி வைக்கப்பட்டன.

தொடர்ச்சியாக கல்லூரியின் கொடிகளை தாங்கிய வண்ணம் கல்லூரியின் ஆண் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது சைக்கிள் பவனியை ஆரம்பித்து கே.கே.எஸ் வீதியினூடாக கல்லூரியின் சகோதரப் பாடசாலையான உடுவில் மகளிர் பாடசாலையை அடைந்தனர். அங்கு கல்லூரியின் மாணவிகளையும் இணைத்து கொண்டு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையை அடைந்து பின்னர் சண்டிலிப்பாய்-சங்கானை-சித்தன்கேணியினூடாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை சென்றடைந்தனர். கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.சி.பிரான்சிஸ், கல்லூரியின் உப அதிபர் கிளாடிஸ் முத்துராஜ், உடுவில் மகளீர் கல்லூரியின் அதிபர் மதுரமதி குலேந்திரன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் பலரும் கலந்துகொண்டனர்.






# ‘கோட்டகோகம’வில் ஐ.தே.கவே முதலில் குடிசையை அமைத்தது!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 25

“கோட்டகோகம’வில் முதலாவது குடிசையை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆஷி மாரசிங்கவே அமைத்திருந்தார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்து போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார் எனவும் அவர் கூறினார்.

காலி முகத்திடலில் உள்ள போராட்ட இடத்தை அகற்ற வேண்டாம் என அப்போதைய பிரதமர் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார். எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் போராட்டத்தைத் தாக்க ஆரம்பித்தார் எனவும் விமல் குறிப்பிட்டார்.



(அ)

# இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஜப்பான் உதவி

கொழும்பு, மார்ச் 25

இலங்கையில் சமூக- பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மனிதாபிமான உதவிக்காக ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்புக்கு வழங்கியுள்ளது.

இந்த நிதி, ‘நெருக்கடியில் உள்ள பெண்களை வலுவூட்டல்’ என்ற புதிய செயற்திட்டத்தின் ஒரு பகுதியென்பதுடன், இது பெப்ரவரி 2023 முதல் டிசெம்பர் 2023 வரை செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்ட குறைந்தது 1,200 பெண்கள் உட்பட அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வீழ்ச்சியடையும் அபாயத்தில் உள்ள 500 பெண்கள் தலைமையிலான நுண் நிறுவனங்களுக்கும், வறுமை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அபாயத்தில் உள்ள 2,000 நபர்களுக்கும் மேலும் ஆதரவளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# நல்லூர் நீர்வள உரையாடல் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 25

“நல்லூர் நீர்வள உரையாடல்” நல்லூர் பிரதேச சபை அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 2.30 மணி தொடக்கம் 05 மணி வரையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கைக்கழகத்தின் வடமாகாண நீர் பாதுகாப்பு செயற்றிட்டமும் - இளைய நீர்த்துறையாளர் - வடக்கு வட்டமும் இணைந்து நடாத்தும் உரையாடலில், உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட உள்ளவர்களும் நீர் சார் ஆர்வலர் மற்றும் செயற்பாட்டாளர்கள் இணைந்து கலந்துரையாடவுள்ளனர். (அ)

## அடுத்த வாரம்...

நடைபெறவில்லை. எனவே அடுத்த வாரம் முதல் தொழில்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்துவது என்ற முடிவு எட்டப்பட்டதாகத் தெரிவித்தனர்.

அரசின் புதிய வரிக்கொள்கையை எதிர்த்து முன்னதாக கடந்த 15ஆம் திகதி நாடு முழுவதும் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தை இந்தத் தொழில்சங்கங்கள் நடத்தின. ஜனாதிபதியுடன் விரைவில் பேச்சு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் செயலர் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதையடுத்து இந்தத் தொழில் சங்கப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அடுத்த...

வெளியிடப்பட்டுள்ளது. அது எப்போதுபாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்று ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது சபையில் சமர்ப் பிக்க முடியும் என தெரிவித்தார்.

இதேசமயம், பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு பதிலாக அறி முகப்படுத்தப்படவுள்ள புதிய பயங்கரவாத தடுப்புசட்டமூலம் நேற்றுமுன்தினம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு இணங்க புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பயங்கரவாத தடுப்பு சட்டம் என்ற பெயரில் நடைமுறை யில் இருந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து அதனை தேசிய பாதுகாப்பு சட்டமாக கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உருவாக்கிய...

மூலம் அறிவிப்பு செய்தார். வடக்கு மாகாண சபை இயங்குநிலையில் இல்லாத நிலையில் வடக்கு ஆளுநர் இந்த நியதிச் சட்டங்களை உருவாக்கி அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஆளுநருக்கு நியதிச் சட்டம் உருவாக்கும் அதிகாரம் இல்லை. இவ்வாறு அவர் செய்தமை சட்ட விரோதமானது என்று தெரிவித்து வடக்கு மாகாண சபை ஆளுநர் சீ. வீ. கே. சிவஞானம் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும் எம். பியுமான எம். ஏ. சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாகி வாதாடினார்.

நேற்று வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, மன்றில் முன்னிலையான சட்டமா அதிபரின் பிரதிநிதி, "நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் ஆளுநருக்கு கிடையாது என்று சட்டமா அதிபர் மூலம் வடக்கு ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது. இந்த நியதி சட்டங்களை நடைமுறைப்படுத்தமாட்டார் என்று எழுத்துமூலம் ஆளுநர் சட்டமா அதிபருக்கு உறுதியளித்துள் ளார். இதன் அடிப்படையில் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிக்காமல் நிறைவுக்கு கொண்டுவர வேண்டும் என்று நீதியரசரை கோரினார்.

ஆளுநரின் உறுதியளிப்பை ஏற்று வழக்கை கைவிட முடியாது. ஆளுநர் தனது நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்கு நேரடியாக வெளிப்படுத்தினால் மட்டுமே அதனை ஏற்று வழக்கை கைவிடலாம் என்று வழக்காளி தரப்பில் வாதாடிய சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

இதையடுத்து நீதியரசர், அடுத்த வழக்கு விசாரணையின்போது - மே 24ஆம் திகதிக்கு முன்பாக, வடக்கு ஆளுநர் தான் அறிவித்த இரு நியதி சட்டங்களையும் இரத்து செய்து வர்த்தமானி மூலம் அறிவித்து நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, வழக்கை மே 24ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஐ)

## கச்சதீவில்...

மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏன் அண்மைக் காலமாக சிங்கள மக்களுக்கும் ஞாபகத்துக்கு வருவது புனித அந்தோனியார் ஆலயமே. கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாக தொன்று தொட்டு காணப்படுகின்றது.

ஆனால், திட்டமிட்ட வகையில் அண்மைய நாட்களில் இரண்டு புத்த பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டதுடன் அரச மரக்கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளன. யாருக்கும் தெரியாத வகையில் உயரமாக பனை ஓலைகளால் வேலியமைத்து அது மூடப்பட்டு காணப்படுகின்றமையை சில நாட்களுக்கு முன்னர் பார்த்த புகைப்படங்கள் மூலம் அறியக்கிடைத்தது. எதிர்காலத்தில் வரலாற்றை திரிபுபடுத்துவதற்கான முயற்சியே இது.

கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்கின்றது. அங்கு 7 தொடக்கம் 10 வரையான கடற்படையினர் பணியாற்றுகின்றனர். அவர்கள் வழிபட சிறியதான புத்தர் சிலையை வைத்து வழிபடலாம். ஆனால், இவ்வளவு பெரிய புத்தர் சிலைகள் எதற்கு? அதை ஏன் மறைத்து வைத்திருக்க வேண்டும். கச்சதீவில் எந்தப் பகுதியிலும் அரச மரங்கள் இல்லை. ஆனால் திட்டமிட்ட வகையில் அரச மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. வட, கிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

போருக்கு பின்னர் இன ஒற்றுமை பற்றி பேசப்படும்போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்பட வேண்டும். இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியில் இவ்வாறான விடயங்கள் அகற்றப்பட வேண்டும். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதம் - தனித்துவம் பாதிக்காத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் - என்றார். (ஐ-03)

## ஐ.எம்.எவ்...

மத்திய வங்கியின் கணக்கில் வரவு வைக்கப்படும். ஆனால், இம்முறை அதற்கான கடன் திறைசேரியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே, அதனை கடனை ஸ்திரப்படுத்த பயன்படுத்தலாம் என்றும் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை சுமார் 300 கோடி டொலர்களை விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 48 மாத நீடிக்கப்பட்ட கடனாக ஐ. எம். எவ். இலங்கைக்கு வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசமைப்பு...

வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும், அரசமைப்பு பேரவைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு பரிந்துரை செய்திருக்கும் சித்தார்த்தன் எம்.பியை பெயரிடுமாறு நான் பல தடவைகள் அரசமைப்பு பேரவையில் தெரிவித்திருக்கிறேன். அது இதுவரை செயல்படவில்லை. அவரின் பெயரை அரசமைப்பு பேரவைக்கு உள்வாங்காமல் இருப்பது வட, கிழக்கு அதிகார பிரதேசத்துக்கும் ஏனைய மக்கள் குழுவுக்கும் மேற்கெள்ளப்படும் மோசமான முன்மாதிரியாகும்.

அதனால் அரசமைப்பு பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 10ஆகும் தற்போது 9பேரே இருக்கின்றனர். அதனால் அந்த இடத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பரிந்துரை செய்துள்ளதன் பிரகாரம் சித்தார்த்தன் எம். பியை பெயரிட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கிறேன் - என்றார். (ஐ)

# தமிழர் உரிமையை பறிப்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்துகிறது

## சிறீதரன் எம். பி. பாராளுமன்றில் சாடல்

கொழும்பு, மார்ச் 25

தமிழர்களின் உரிமைகளை எவ்வாறு பறிக்கலாம் என்று அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. பிற இனங்களையும் அவர்களின் உரிமைகளையும் அழிக்கும் கொள்கையில் இருந்து அரசாங்கம் முதலில் வெளிவர வேண்டும். அதனை விடுத்து செயல்பட்டால் உலகில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் கொண்டு வந்தாலும் இந்த நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது.

- இவ்வாறு தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் சுதந்திரமாக - நிம்மதியாக வாழும் சூழல் இந்த மண்ணில் உள்ளதா? பல்வேறு கட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்வியல் கட்டமைப்பில் ஓர் அணுகுமுறையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா, நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காண இதுவரையில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகள் அவதானம் செலுத்தவில்லை. சிறந்த தலைவரை இந்த நாடு தெரிவு செய்யவில்லை.

தமிழ்களின் பூர்வீக நிலங்களை எவ்வாறு அபகரிப்பது என்பது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழர்களின் இருப்பு திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகிறது - என்றார். (ஐ)

## அரசமைப்புக்கு...

கருத்துத் தெரிவித்த போதே, வடக்கு மகாண சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 13ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபையின் வரம்புகள் தெரியாத ஒருவர் ஆளுநருக்கு இருப்பதற்கு தகுதி இல்லாதவர். ஆளுநர் பதவிக்கு வருவதற்கு முன்னர் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை அதிகாரங்கள் குறித்து அவர் தெரிந்திருக்க வேண்டும். அல்லது ஆளுநரான பின்னராவது இது பற்றி அவர் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இதைப் பற்றித் தெரியாத ஒருவர் ஆளுநர் பதவியில் இருப்பதற்கு தகுதி இல்லாதவர்.

ஆளுநராக பதவியேற்கும்போது அரசமைப்புக்கு விசுவாசமாக நடப்பேன் என்று அவர் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டும். அப்படி சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராசா தற்போது அரசமைப்புக்கு முரணான ஒரு செயல்பாட்டை செய்துள்ளார். அதாவது, அரசமைப்பில் இல்லாத ஒரு செயல்பாட்டை செய்துள்ளார்.

இந்நிலையில்தான், ஆளுநர் தான் வெளியிட்ட இரு நியதிச் சட்டங்களையும் இரத்து செய்து வர்த்த மானி வெளியிட்டு அதனை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, வடக்கு ஆளுநர் தனது பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் -என்று கூறினார். (ஐ)

## ஐ.எம்.எவ். கடன்...

இருக்கிறது. அதனால் இது தொடர்பாக முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்ளுமாறு 2016 மார்ச்சில் நானே முதலாவது ஆளாக அமைச்சரவைக்கு கோரிக்கை விடுத்தேன். அதனடிப்படையில் அன்று அரசாங்கம் செயல்பட ஆரம்பித்தது. அதற்காக ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து பாதுகாக்க சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. 2017 ஜூன் மாதத்தில் இருந்து 2020 ஜூன் வரைக்கும் அந்த நடவடிக்கையை மேற்கொண்டு சென்றோம். அதன் மூலம் தான் நாங்கள் வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க முயன்றோம். ஆனால், 2019இல் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் இவர்கள் சர்வதேச நாணய நிதியத்தை உதைத்தார்கள். நாணய நிதியத்தில் இருந்து விடுபட்டு நாட்டின் இறையாண்மையை பாதுகாத்ததாக பிரசாரம் செய்தார்கள். இதேபோன்று உங்கள் நாடு ஸ்திரமற்ற நிலையில் இருக்கிறது. நாடு வங்குரோத்து அடையப்போகிறது என 2020 மார்ச் முதல் வாரத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கை மத்திய வங்கிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

நாடு இந்தளவு பெரிய பொருளாதார நெருக்கடிக்கு செல்வதற்கு காரணம், அன்று சர்வதேச நாணய நிதியம் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக செயல்படாமல் தான்தோன்றித்தனமாக செயல்பட்டமையாகும். அதனால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பைவிட பலமடங்கு விசாலமானதாகும். அதனால் இந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்கவேண் டும் - என்றார். (ஐ)

## மாகாண...

ஏற்பட்டமை தொடர்பில் நான் மகிழ்கிறேன். அதற்கு மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் பிற்போடப்பட்டமை தொடர்பில் இங்கே உரையாடப்பட்ட போது, அமெரிக்க தூதுவர் ஜூலி சங், பிற்போடப்பட்டுள்ள மாகாண சபை தேர்தல் பற்றி கேள்வி எழுப்பியமையை நான் வரவேற்கிறேன். அதேபோல் இந்திய பிரதி தூதுவரும் தமது நாட்டின் நிரந்தர நிலைப்பாடாக மாகாண சபை தேர்தல்கள் இருக்கின்றது எனக்கூறினார். அதையிட்டும் மகிழ்கிறேன்.

உள்ளூராட்சி சபை தேர்தல், மாகாண சபை தேர்தல் இரண்டும் நடத்தப்பட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். உள்ளூராட்சி தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அதேயளவு ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தலும் முக்கியம் என்பது எங்கள் கட்சியின் உறுதியான நிலைப்பாடு.

இதேபோல் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் சர்வதேச நிதி உதவிகள் மூலமான "வறுமை நிவாரணங்கள்" பெருந்தோட்ட பிரிவினருக்கு கட்டாயமாக வழங்கப்படுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும். ஏனென்றால், இப்போது நலிவடைந்த பிரிவினரை அடையாளம் காணும் செயல்பாட்டை அரசாங்கம் முன்னெடுகின்றது. அதில் நிறைய அரசியல் கலந்துள்ளது. ஆகவே, அதன் மீது எமக்கு நம்பிக்கை இல்லை.

இந்த நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, பெருந்தோட்ட உழைக்கும் மக்கள் உள்ளனர் என்பதை இன்று பல கணிப்பீடுகள் கூறுகின்றன. ஆகவே, உங்களின் உதவிகளால் வழங்கப்படும் வறுமை நிவாரண கொடுப்பனவுகள், பெருந்தோட்ட துறைக்கு வழங்கப்படுவதை உறுதிபடுத்துங்கள் - என்றும் இதன்போது மனோ எம். பி. கோரிக்கை விடுத்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# தளம்பும் ரூபாய்!

கொழும்பு, மார்ச் 25

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலை நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று சிறிதளவு அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் நேற்று வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 314.74 ரூபாவாகவும் விற்பனை விலை 331.37 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 311 ரூபாய் 26 சதமாகவும் விற்பனை விலை 328 ரூபாய் 60 சதமாகவும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஆசிரியர் இடமாற்றச் சபை கலைப்பு ஜனநாயக விரோதம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 25

தேசிய ஆசிரிய இடமாற்ற சபையைக் கலைத்தமை ஜனநாயகத்திற்கு விரோதமானது என ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்-

தேசிய ரீதியில் நடைபெறுகின்ற ஆசிரிய இடமாற்றங்களில் பல்வேறு குறைபாடுகள் மோசடிகள் நடைபெறுவது தொடர்பில் கடந்த காலங்களில் நாம் கல்வி அமைச்சிடம் முறைப்பாடுகளை முன்வைத்திருந்தோம். அவை எவற்றிற்குமே எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு மாறாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுவதும், அதைக் கருப்பொருளாக வைத்து பலர் லஞ்சம் பெறுவதும் அதிகரித்துள்ளன. சிலர் இதன் மூலம் லட்சக்கணக்கான பணத்தை ஆசிரியர்களிடம் பெற்றமையை எம்மால் நிரூபிக்க முடியும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எந்தவொரு சபை உறுப்பினரும் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரம் இருக்குமானால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கையை முதலில் நாம் எடுப்போம். ஆனால் எமது சங்கத்தில் அதுபோன்ற லஞ்சம் பெறும் உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதனை உறுதியாக உரைக்க முடியும்.

இதுபோன்ற லஞ்சம் பெறும் குற்றவாளிகளைக் கட்டுப்படுத்துவதை விட்டுவிட்டு இடமாற்ற சபையைக் கலைப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது. இதனால் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவர்களுமே.

தயவு செய்து தாங்கள் எடுத்துள்ள முடிவை மாற்றி ஆசிரிய இடமாற்றச் சபையானது சுயாதீனமாகவும் தூய்மையாகவும் நடைபெற ஆவன செய்யுங்கள்.

கல்வியில் இடையூறுகள் ஏற்படுவது மாணவர் கல்வியை மட்டுமல்லாது ஆசிரியர்களின் மனங்களையும் புண்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பணம் வழங்குவீர்களா? இல்லையா? ஒரு வார்த்தையில் பதில் கூறுங்கள்!

## சபையில் சஜித் பிரேமதாஸ கிடுக்கிப்பிடி



கொழும்பு, மார்ச் 25

**தேர்தலுக்கு பணம் வழங்குகிறீர்களா? இல்லையா? என ஒரு வார்த்தையில் பதிலளிக்குமாறு, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை கிடுக்கிப்பிடி பிடித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

நேற்று பாராளுமன்ற விவாதத்தின்போது இந்த சம்பவம் நடந்தது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த 10 பில்லியன் ரூபாவை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கி தேர்தலை நடத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன -

இதுபற்றி உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகள் நடந்து வருகின்றன. திறைசேரிச் செயலர் உயர் நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்துள்ளார். அந்த முடிவுகளின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப நாங்கள் செயல்படுகிறோம். நீதிமன்றத்தில் உள்ள விடயங்களைப் பேசுவதில்லை. நீதிமன்றம் சென்றது நாங்கள் அல்லர் - என்றார். (அ)

# கல்வியியல் கல்லூரிகளில் பயின்ற 7,800 பேர் ஆசிரியர் சேவைக்குள்!

கொழும்பு, மார்ச் 25

கல்வியியல் கல்லூரிகளில் பயின்ற 7,800 டிப்ளோமாதாரிகளை அடுத்த மாதம் ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது அவர்களின் பெறுபேறுகள் அடங்கிய ஆவணங்கள் தேசிய கல்வி நிறுவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு கூறியுள்ளது.

முதலாம் தரம் முதல் 11 ஆம் தரம் வரை, கணிதம், விஞ்ஞானம், ஆங்கில பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களே புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். (அ)

# குழந்தைகளின் போசாக்கின்மை குறித்து ஆராய்வதற்காக விசேட பாராளுமன்ற குழு

கொழும்பு, மார்ச் 25

இலங்கையில் குழந்தைகளின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் இந்த குழுவில் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்தக் குழுவில், நளின் பெர்னாண்டோ, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, கீதா குமாரசிங்க மற்றும் அலி சப்ரி ரஹீம் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நீக்குவதற்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை அடையாளம் காணவும், இந்த நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்துவதை மேற்பார்வையிடவும் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் அவசியமான தேவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிக குழுக்களாகும்.

ஒவ்வொரு குழுவும் அத்தகைய குறிப்பிடப்பட்ட ஒரு விடயத்தை விசாரித்து சபைக்கு அறிக்கை செய்வதற்காக பாராளுமன்றத் தீர்மானத்தால் நியமிக்கப்படுகின்றது.(அ)

# மக்கள் யார் பக்கம் என்று அறிய உள்ளூர் தேர்தலை நடத்துங்கள்!

## அரசுக்கு எதிரணி சவால்

கொழும்பு, மார்ச் 25

மக்கள் மனநிலையை அறிய குறைந்த பட்சம் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையாவது அரசு நடத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அதேவேளை, உளளூராட்சிச்சபைத் தேர்தல் நடத்தப்படும் கால எல்லையை அரசு அறிவிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# குடிவரவு திணைக்களத்தின் மின் இணைப்பு துண்டிப்பு!

கொழும்பு, மார்ச் 25

மின்சார கட்டணத்தை செலுத்தாமையால் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் குருநாகல் காரியாலயத்தில் மின்சாரம் நேற்று துண்டிக்கப்பட்டது.

குறித்த அலுவலகத்தில் சேவையை பெற ஏராளமானோர் வரிசையில் காத்திருந்தபோதும், மின்சார சபையினர் வந்து அலுவலகத்தில் மின் இணைப்பை துண்டித்தனர்.

இதனால் அதிகாலை முதல் வரிசையில் காத்திருந்த மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 25

நேற்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் லங்கா சதொச ஊடாக பல அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ,

| | | | |
|---|---|---|---|
| ஒரு கிலோ செத்தல் மிளகாய் | ரூ.120 குறைப்பு | - | புதிய விலை ரூ.1380. |
| ஒரு கிலோ வெள்ளை பூண்டு | ரூ.25 குறைப்பு | - | புதிய விலை ரூ.450. |
| ஒரு கிலோ சம்பா அரிசி (உள்ளூர்) | ரூ.11 குறைப்பு | - | புதிய விலை ரூ.199. |
| ஒரு கிலோ பருப்பு | ரூ.07 குறைப்பு | - | புதிய விலை ரூ.298. |
| ஒரு கிலோ வெள்ளைச் சீனி | ரூ.07 குறைப்பு | - | புதிய விலை ரூ.210. |
| ஒரு கிலோ பெரிய வெங்காயம் | ரூ.10 குறைப்பு | - | புதிய விலை ரூ.119. |
| ஒரு கிலோ நெத்தலி | ரூ.25 குறைப்பு | - | புதிய விலை ரூ.1100. |
| ஒரு கிலோ கொண்டைக்கடலை | ரூ.15 குறைப்பு | - | புதிய விலை ரூ. 555. |
| ஒரு கிலோ உருளைக்கிழங்கு (உள்ளூர்) | ரூ.10 குறைப்பு | - | புதிய விலை 270 ரூபா. |
| ஒரு கிலோ ரின் மீன் 425 கிராம் | ரூ.10 குறைப்பு | - | புதிய விலை ரூபா 520. |

# தேர்தல் ஆணைக்குழுவுடன் பிரதமர் விரைவில் பேச்சு

கொழும்பு, மார்ச் 24

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை விரைவில் அழைத்து பேச்சு நடத்த எதிர்பார்ப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

“நீதிமன்றமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் நான் கருத்துகூற முற்படவில்லை.எனினும், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை அழைத்து தேர்தல் சம்பந்தமாக கலந்துரையாட எதிர்பார்க்கின்றேன்.” - எனவும் பிரதமர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.